
www.padippakam.com

# கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்



டிசம்பர், 1991. இதழ் விலை ரூ. 3.

படிப்பகம்

www.padippakam.com

# காலச் சக்கரம்

சக்கரத்தை எப்பொழுது மனிதன் கண்டுபிடித்தானோ, அப்பொழுதுதான் விலங்கிலிருந்து முற்றுமாக விலகி, மனிதனாகத் தன்னை அடையாளம் கண்டு கொண்டான் என்று படுகிறது.

சக்கரத்தைக் கண்டுபிடித்து, அதன் உதவியால் தன் வாழ்க்கைச் சவாரியைத் தொடங்கியதும், அவனுக்குக் காலத்தைப் பற்றிய புதிய கண்ணோட்டம் தோன்றியிருக்க வேண்டும். அதனால்தான் 'காலச் சக்கரம்' என்றொரு சொல்லாட்சியை அறிமுகப்படுத்தியிருக்கிறான். அதற்கு முன்னால் காலம் அவனுக்கு என்னவாய்த் தோன்றியிருக்கும்? ஒருவேளை ஓர் இனிய ஊற்றாய், போகப் போகப் பிரளயமாய்ப் பெருக்கெடுத்தோடும் நதியாகத் தோன்றியிருக்குமோ! நதிக்குச் சங்கமம் உண்டு. ஆனால், காலத்திற்குச் சங்கமம் ஏது? தொடக்கம்தான் ஏது? இப்படித் தொடக்கமோ முடிவோ இன்றி, தொடக்கமே முடிவாகி, முடிவே தொடக்கமாகிக் காலச் சக்கரம் சுழன்றுகொண்டே இருக்கிறது என்பதைக் கண்டபோது, மனிதன் தன்னை அடையாளம் கண்டு கொண்டதோடு, தன்னுடைய வாழ்க்கையும் ஒரு முடிவில்லாத தேடலே என்பதை அறிந்திருப்பான்.

காலத்துக்கு முடிவில்லை என்பதோடு அதற்கேது மூப்பு? அதனால் அல்லவா நம் முன்னோர்கள் காலத்தை அறுபது கால்களைக் கொண்ட சக்கரமாகப் பாவித்திருக்கிறார்கள்! காலத்தை ஒன்று, இரண்டு என்று எண்ணி அலுப்பதில் என்ன புத்திசாலித்தனம் இருக்கப் போகிறது? அலுத்துப் போவதைத் தவிர வேறென்ன அனுபவம் கிடைக்கப் போகிறது?

இதற்கு மாறாக, கால ஓட்டத்தை மீண்டும் மீண்டும் புதிதாய்ப் பிறப்பித்துக் கொள்ளும் முறையானது பலகோடி அர்த்தங்களைத் தருகிறது. அதனால் அல்லவா நமது மகாகவி பாரதிகூட, "இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நீவிர் எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு, தின்றுவிளையாடி இன்புற்றிருந்து வாழ்வீர்," என்று நம்மை ஆசீர்வதிக்கிறான்!

இன்று விடிந்த நாள் இன்னும் 60 நாழிகை கழித்து இதேபோல விடிகிறது. இப்பொழுது பிறந்த நிமிஷம் இன்னும் 60 வினாடிகளில் இன்னுமொரு நிமிஷமாகப்

(தொடர்ச்சி— பின் அட்டை உள் பக்கம்)

படிப்பகம்

www.padippakam.com



# கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மாதத்தின் முதல் வாரத்தில் வெளி வருகிறது

தனி இதழ் விலை ரூ.3.
ஆண்டுச் சந்தா ரூ.36.

படைப்பில் உயிர்ப்பும் பார்வையில் கவித்துவமும் மிக்க எல்லா வகை இலக்கிய வெளிப்பாடுகளையும் ஏற்றுக் கொள்கிறது.

திறனாய்வுக்குப் புதிய நூல்கள் மட்டுமே ஏற்கப்படுகின்றன.

இதழை 580, T.H.Road, சென்னை-21இலிருந்து வெளியிடுபவரும் ஆசிரியரும்: கவிதாசரண். ஆல்வெல்பிரஸ், 31, T.K.S.நகர் சென்னை-19இல் அச்சிடுபவர்: திருமதி கவிதாசரண்.

படைப்பாளர்களே தங்கள் படைப்புகளுக்குப் பொறுப் பேற்கிறார்கள்.

வெளியிடுவதற்கு ஏற்கப்பட்டவற்றைத் திருத்தவும் மாற்றவும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

படைப்புகளை அனுப்ப மற்றும் எல்லாத் தொடர்புகளுக்கும்:

ஆசிரியர், கவிதாசரண்,
31, டி.கே.எஸ். நகர்,
சென்னை-600019.

இதழ் பற்றிய உங்களின் மதிப்பீடுகளும் எதிர்பார்ப்புகளும் இதழின் தளத்தை விசாலப் படுத்தும். இதழுக்கான உங்களின் சந்தாவும் நட்பும் இதழின் நலத்தைச் செழுமைப்படுத்தும்.

## இதழின் படைப்பாளர்கள்:

கவிதாசரண்
இராம. கண்ணப்பன்
என். ஆர். தாசன்
துறவி
நா.விச்வநாதன்
மின்னூர் சீனிவாசன்
ச.உமாபதி
தே இராமதாசு
முத்துநிலவு
பொன்னீஸ்வரன்
இன்னும் சில பூக்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# நேசம் பேசும் வாசகர்கள்

'கவிதாசரண்' இதழ் கிடைத்தது மகிழ்ச்சி. இதழின் அமைப்பு எனக்குப் பிடித்திருக்கிறது. வெளியான எழுத்துகளைப் பார்த்தபோது 'கண்ணதாசன்' இதழ் இருந்த இடத்தை இது பூர்த்தி செய்யும் என்னும் நம்பிக்கையை இது தோற்றுவித்தது.

**என்.ஆர்.தாசன், சென்னை-44**

○

'கவிதாசரண்' முதல் இதழ் கிடைத்தது. நன்றி. தமிழில் தரமான படைப்பிலக்கியம் வளர, இத்தகைய இதழ்கள் இன்று மிக அவசியம். இதழின் அச்சும் அமைப்பும் நன்று. புகழ்பெற்ற கண்ணதாசன் இதழை நினைவூட்டுகிறது. மனித நேயம் பாடும் கவிதாசரண் வாழ்க! வளர்க! வெல்க!

**தி.க.சிவசங்கரன், நெல்லை**

○

கவிதாசரண் தனித்தன்மை வாய்ந்த இதழாக இருக்க விரும்புகிறேன். இலக்கிய உலகில் 'குழு' மனப்பான்மை உள்ளது. அது போல் இல்லாது, எல்லா இலக்கிய வாசகர்களும் விரும்பும் வண்ணம் அமைய வேண்டுகிறேன்.

**துரை.மதிவாணன், கோழிக்கோடு**

இந்த இதழ் படைப்பாளிகளுக்கு ஒரு வைட்டமின் டானிக்! வாசகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். தமிழ் இலக்கியவாதிகளுக்குத் தாகம் போக்கிடும் அமிருத கலசம்!

**வி.எஸ்.ராஜகோபால், கிருஷ்ணகிரி**

○

இதழ் அருமையான கொம்புத்தேன். பொது நூலகத்தில் வாசகர்கள் பார்வைக்கு வைத்துள்ளேன். இலக்கியப் பணியில் இமயமென ஓங்கட்டும்.

**இரா நவமணி, அம்பை**

○

அருமையான இலக்கியப் படைப்பு! மீன் கடைகளுக்கு நடுவே பூக்கடைபோல் உள்ளது கவிதாசரண்.

**T.M.கிருஷ்ணன், சங்ககிரி**

○

கவிதாசரண் வந்ததே!
கனிபோல் என்னுள் இனித்ததே!
கங்கை என்னுள் பொங்குதே!
புவியில் ஓங்கிப் புகழில் உயர்ந்து
பூவாய் மணக்க வாழ்த்துவேன்.

**தி.சிவசுப்பிரமணியன், தென்காசி**


○

எத்தனையோ இதழ்களையும் மலர்களையும் சுவைத்திருக்கிறேன். அவைகளில் இல்லாத மணமும் சுவையும் தங்கள் இதழில் அறிந்தேன். காரணம் அதன் தெள்ளு தமிழ்.

**தா.ப.ஔதிகன், ஏரல்**

படிப்பகம்

www.padippakam.com



இதழ் கண்டேன். கழிபேருவகை கொண்டேன். 'கண்ணதாசன்' நின்று போன போது ஆறாத் துயருற்றேன். இன்று 'கவிதாசரண்' வந்த போது அதே இதழ்தானோ என்று பெரு வியப்புற்றேன். அகத்தோற்றத்திலும் புறத்தோற்றத்திலிம் கண்ணதாசன் போன்றே உள்ளது. தொடர்ந்து நடத்துங்கள். வாழ்க கவிதாசரண்!

**புலவர் பி முருகேசன்,**
**கங்கைகொண்ட சோழபுரம்**

○

கவிதாசரண் இதழ் உண்மையிலேயே என்னை வியப்பில் ஆழ்த்தியது. தீபம், கண்ணதாசன் ஆகிய இலக்கிய இதழ்களுக்குப் பின் மிகுந்த இலக்கிய நயத்தோடும், சிந்தனை வீச்சோடும், யதார்த்த தொனி நயத்துடனும் வெளிவரும் ஒரே இதழ் கவிதாசரண்தான் எனில் அது மிகுத்துரைப்பதன்று. இதழை நிறுத்தாமல் தொடர்ந்து வெளியிடுங்கள். இலக்கிய தரிசனம் வேறு எந்த இதழ் முகங்களிலும் காண முடியவில்லை.

**ச.உமாபதி, சென்னை-85**

இதழைக் காண ஆவலுடன் காத்திருக்கிறேன். கவிதாசரண் எனும் இதழின் பெயர் நன்கு அமைந்துள்ளது. தேர்ந்தெடுத்த இலக்கிய மனத்துக்கு என் அன்பு வாழ்த்து.

**நெஞ்சத்தரசு, திண்டுக்கல்**

○

புதுமைப் பொலிவோடு புதுக் கருத்து விழுதுகளைத் தாங்கி வரும் கவிதாசரண் ஆல்போல் தழைக்க என் பாராட்டுகள். புதுக்கவிதைகளும் கதைகளும் அருமையான முறையில் படைக்கப்பட்டுள்ளன. கவர்ச்சியான திரைப்பட மோகம் நல்ல இலக்கியச் சுவையைத் தளர்த்திவரும் காலத்தில், துணிச்சலாக இலக்கிய இதழ் நடத்தத் திட்டமிட்டதற்கு மனமுவந்த பாராட்டு.

**சு.வேல்முருகன் புதுவை**

○

இதழையும் கடிதத்தையும் படித்தேன். சந்தோஷம். உங்கள் ஆர்வமும் ஆசையும் கடித வரிகளில் தெரிகின்றன. உங்கள் ஆற்றலும்உழைப்பும்பத்திரிகையில் புலனாகின்றன. உயர்ந்த நோக்கம். நல்ல முயற்சி. ஆசை நிறைந்த திட்டம். வாழ்க! முதல் இதழ் சிறப்பாக இருக்கிறது. நல்ல தரமான தயாரிப்பு. உங்களின் உழைப்பும், உற்சாகமும், எழுத்தாற்றலும், நண்பர்களின் துணையும் ஒத்துழைப்பும் இதழை வளம் செய்யும், வாழ வைக்கும் என எதிர்பார்க்கிறேன். வாழ்த்துக்கள்.

**வல்லிக்கண்ணன், சென்னை**

படிப்பகம்

www.padippakam.com

# புரட்சிக் குயில்

பாரதி என்னும் புரட்சிக் குயிலின் பெருமையை முழுதும் திரட்டி, சொற்களின் சிறையில் அடைத்து விடுவது ஆகாத செயல். அவர் வான் முட்ட வளர்ந்த புகழ்க் கலசம். மண்ணைத் துளைத்துக் கொண்டு வேரோடிய ஆலமரம். பாரதி பற்றியும் அவர் பாடல்கள் பற்றியும் சொல்லத் தொடங்கினால், நம் சொற்கள் வறுமையுறும். அவர் கவிதைச் சிறப்பை அவரது வார்த்தைகளாலேயே பாராட்டுவதானால், ''விண்டுரைக்க மாட்டாத விந்தையடா! விந்தையடா! ஆசைக் கடலின் அமுதடா! அற்புதத்தின் தேசமடா!'' என்று கூவிக் களிக்கத் தோன்றுகிறது. அவர் கவிதைகள், ''புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி, மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சி தந்து, விண்ணை வெளியாக்கி, விந்தை செயுஞ் சோதி'' ஆகும். அக் கவிதைகளின் எளிமையும் இனிமையும் ''காட்டில் விலங்கறியும்; கைக்குழந்தை தானறியும்.'' சொல்லச் சொல்ல அவர் சொற்கள் சுடரும். எண்ண எண்ண அவர் கவிதைகள் இனிக்கும். புல்லப் புல்லக் களிப்பூட்டும் பூஞ்சிட்டுப் போல அவை நம்மைக் கவர்கின்றன.

''சுவை புதிது பொருள் புதிது
வளம் புதிது சொற் புதிது
சோதி மிக்க,
நவ கவிதை எந் நாளும்
அழியாத மகாகவிதை''

என்பதுதான் அவர் கவிதையின் வலிமை. கவிஞன் சத்தியம். அவன் கவிதை சத்தியத்தின் அற்புதமான பாவனை. சத்தியமே ஒப்பற்றதாயின், சத்தியத்தைப் பற்றிய பாவனை அதனினும் அற்புதமன்றோ! பாரதியும் அவருடைய கவிதைகளும் அத்தகையவே. பெருமை எனும் பெற்றியைச் சொல்லில் வடித்து விடக் கூடும் எனில், அந்தப் பெருமையினும் சொற்கள் பெரியவையாகிவிடுமன்றோ! சொற்களின் இயலாமையி லல்லவோ பெருமை செம்மாந்து நிற்கும்! பாரதியும் அத்தன்மையரே.

''புவியனைத்தும் போற்றிட
வான் புகழ் படைத்துத்
தமிழ்மொழியைப்
புகழிலேற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக்
கிலலை எனும்
வசை என்னால்
கழிந்த தன்றே!''

என்று தம்மைப் பற்றிச் சொல்லிப்போனார் பாரதி. அந்த வாய்மைக்குத் தலை வணங்குவதொன்றே நம்மை வாய்மையறிந்த மனிதர்களாய்க் காட்டிக் கொள்ள நமக்களிக்கப்பட்ட வாய்ப்பாகும்.

பாரதி பாடாத துறையில்லை; பேசாத கலையில்லை. அவர் நாட்டைப் பற்றிப் பாடினார்; மொழியைப் பற்றிப் பாடினார்; ஒற்றுமைக்குப் பாடினார்; உத்தமர்களை வாழ்த்தினார். விடுதலைக்குச் சங்க

படிப்பகம்

www.padippakam.com



நாதம் செய்தார். வெற்றிக்கு வழிகளைச் சொன்னார்; விடுதலை பெற்றபின் இந்த நாடு வாழ வேண்டிய வகைகளை வகுத்தார். கல்வியைப் பற்றிக் கட்டளைகள் பிறப்பித்தார். காதலைப் பற்றிக் கீதம் இசைத்தார். பெண்ணடிமை நீங்கப் பெருமுழக்கம் செய்தார். புதுமைப் பெண்ணை உருவாக்கி நடமாட விட்டார். அடிமைப்பட்ட மானிடர்க்குக் கண்ணீர் விட்டுக் கதறினார். அவர்கள் கண்ணீர் விட்டு வளர்த்த உரிமைப் பயிரைக் காப்பாற்றும்படி தெய்வத்தை மன்றாடினார். யுகப் புரட்சியை வாழ்த்தி வரவேற்றார்; யோகப் பயிற்சியைக் கைக்கொள்ள வேண்டினார். புதிய ஆத்தி சூடி தொடுத்து வருங்கால மன்னர்களை ஊக்கினார். 'கண்ணன் பாட்டு' எழுதித் தன் கடவுளன்பைக்காட்டினார். 'குயிற் பாட்டு' எழுதிப் புதிய தத்துவ விளக்கம் தந்தார். 'பாஞ்சாலி சபதம்' எழுதி நம் பழம்பெருஞ் சிறப்புகளைச் சுட்டினார். 'மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை,' என்று சொல்லித் திறமான புலமை கொள்ளத் தூண்டினார்.

அறிந்தோர் மலைத்து நிற்கும்படி அவர் பாடிய திறந்தான் என்னே!

உலகில் வேறெந்தக் கவிஞரும் செய்யாத சாதனை யிது. எந்தச் சிக்கலைப் பற்றிப் பேசுவதாயினும், எந்தச் சிறப்பைப் பற்றிப் புகழ்வதாயினும், பாரதியைத் தயங்காமல் துணைக்கழைக்கலாம். அவர் பாடல்களைச் சரியான மேற்கோள்களாகக் காட்டலாம். இது ஒன்றே அவர் மகாகவி என்பதற்குச் சான்றாகலாம்.

ஆனால், அந்த மகாகவி தம் வாழ்நாளில் ஆதரவின்றி அல்லலுற்றுத் தவித்தார்.

"காலா! உனை நான் சிறு
புல்லென மதிக்கிறேன்;
என்றன் காலருகே வாடா!
சற்றே உனை மிதிக்கிறேன்."

"சுற்றி நில்லாதே போ,
பகையே!
துள்ளி வருகுது வேல்!"

என்றெல்லாம் வீரக் குரலெடுத்துப் பாடிய அந்தப் பெருங்கவிஞர் அற்பாயுளோடு மறைந்து விட்டார். ஆனால், அவர் கவிதையோ, இன்றும் அந்தக் காலனைச் 'சிறு புல்லென மதிக்கிறேன்; உனை மிதிக்கிறேன்!' என்றே சிரிக்கிறது. கவிதையின் பெருமை இதுவே.

**11-12-1991ஆம் நாள் மகாகவி பாரதியின் 110ஆம் பிறந்த நாள்**

படிப்பகம்

www.padippakam.com



# வானத்தை நான் ஆள வேண்டும்

வானத்தை நான் ஆள வேண்டும்—இந்த
வையத்தை மேலேற்றிப் பந்தாட வேண்டும்.
ஈனத் தனத்தில்ம கிழ்ந்தே—அதற்
கேற்றம் கொடுத்தவன் நெஞ்சைப் பிளந்து
'மானிடன் நீ' என்ற மெய்யை—உயர்
மந்திரக் கோலில்வ ரைந்துயிர் தந்து
'மானிட னே எந்தன் தூதாய்—இந்த
மாநிலத் தைச் சுற்றி வா' எனல் வேண்டும்.

நாணயம் என்றொரு சொல்லை—வைத்து
நாணய மில்லாமல் சில்லறை தேடி
கோணலை வாதம் என் றாடி—மனக்
குப்பைக்கு ரங்கினைக் கொம்பினில் ஏற்றி
ஆணவத் தைஉண வாக்கி—அதன்
ஆதுர மின்மையை ஆதார மாக்கி
வீணுக்க லைந்துயிர் தின்னும்—கொடும்
வேட்டைப் புலைநாயை வீழ்த்திட வேண்டும்.

மூடிம றைக்கும் இருட்டில்—அச்சம்
மோதிம ருட்டும்ம னத்தின்க னத்தை
ஓடிக்கு ரைத்தும றைக்கும்—வெறும்
உன்மத்தக் கோழைகள் ஊர்கூடும் மன்றில்
ஈடற்ற வீரர்கள் போலே—நின்று
எக்காள மிட்டுத்த லைநிமிர்ந் தாடும்
நாடகந் தன்னைக் கலைத்து—அவர்
நாவினில் வாய்மைத் தவம்காண வேண்டும்.

பேசத்தெ ரிந்தவி லங்காய்—இழி
பேடிமை வாழும் இருட்டுக்கி டங்காய்,
வேசைத்த னத்தின்வி ழைவாய்—படு
வீழ்ச்சிக் கிசைந்தப கைமண்டும் காடாய்,
ஆசைக்குக் காவல்செய் நாயாய்—பற்றும்
அற்பத்த னத்துக்க லையும்பி சாசாய்
நாசப்ப டும்இந்த வையம்—தன்னில்
ஞானச் சுடர் ஏற்றி நான் ஆட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



என்னைத்தமிழ் அன்னைபெற்றாள்
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்ற பின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.


# கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மலர் ஒன்று டிசம்பர், 1991 இதழ் இரண்டு


இலக்கியமாகி வரும் இனிய நண்பர்களே, வணக்கம்.

'கவிதாசரண்' வெளிவரும் செய்தியை அறிந்த அளவில் நூற்றுக் கணக்கான இலக்கிய நண்பர்கள் மகிழ்ச்சியோடு தங்கள் வாழ்த்தையும் பாராட்டையும் வெளியிட்டிருந்தார்கள். தொடர்ந்து, குறித்த நாளில் வெளிவந்த முதல் இதழைப் படித்து அனுபவித்து, தங்கள் எதிர்பார்ப்பையும் மீறிய திருப்தியோடு எங்களைப் புகழ்ந்து மகிழ்ந்தார்கள். ஊற்றுக்கண் திறந்தாற் போன்ற அவர்களின் மனந்திறந்த பாராட்டு ஒரு தரிசனமே போல் என்னைப் பரவசப் படுத்தியது. என்னுடைய நன்றியை ஒரு சொல்லாக உதிர்ப்பதைக் காட்டிலும் சுகமான சுவாசமாக இதழில் இழைய முயல்வது நலமாயிருக்கும் என்று நம்புகிறேன். என்றென்றைக்குமாக உங்கள் மதுரமான ஆதரவு இதழைச் சில்லென்று பூக்க வைக்கும் சூரியக் கதிர்களாய்த் தழுவி நிற்க வேண்டும்.

கடிதம் எழுதிய நண்பர்களில் ஏறக்குறைய எல்லாருமே நமது இதழ் புகழ் பெற்ற 'கண்ணதாசன்' இதழை நினைவு படுத்துவதாகவும், எதன் காரணமாகவும் தடைபடாமல் வளர வேண்டும் என்றும் உள்ளார்ந்த இலக்கிய வேட்கையோடு ஒரு 'வேண்டுதலே' போல் குறிப்பிட்டிருந்தனர். 'வேண்டுதல்'

படிப்பகம்

www.padippakam.com

என்பது கொம்பு சீவப்படாத கட்டளைதான் என்பதை இதை விட நளினமாக யாரால் சொல்லக் கூடும்? இப்படியொரு கட்டளைக்காக என்போல் யார்தான் ஏங்கியிருக்கக் கூடும்?

இந்த இதழைத் தொடங்கும்போது எதனை மனதில் உருவகித்திருந்தோமோ, எதுவாக அறிமுகமாகி இலக்கிய அர்ப்பணமாய்ச் சிகரங்களைத் தேடிப் பயணம் கொள்ள உறுதி பூண்டிருந்தோமோ, அதனையே நூற்றுக்கணக்கான முகமறியா நண்பர்களும் அடையாளம் கண்டு ஆசீர்வதிக்கிறார்கள் என்பது ஓர் அற்புதமேபோல் என்னுள் தாக்கம் கொள்கிறது. வேடிக்கை பார்க்கக் கூடிய பாமரக் கூட்டத்தோடு தானும் ஒருவனாய்க் கலந்து நிற்கும் ராஜகுமாரனை அலங்காரம் பண்ணிக்கொண்டு வரும் பட்டத்து யானை அடையாளம் கண்டு, அவன் கழுத்தில் மாலைபோட்டுத் தன் முதுகில் அமர்த்திக் கொள்ளுமாமே, அது இப்படித்தானோ!

'கண்ணதாசன்' இதழ் இலக்கிய வட்டத்தில் ஏற்படுத்திய தாக்கம் இன்றைக்கும் பசுமையாக நினைவு கூரப்படுவதே நம் இதழுக்குக் கிடைத்த கௌரவமான அங்கீகாரம். 'கண்ண தாசன்' வாசகர்கள் இலக்கியத்தை அனுபவித்வர்கள்; அறிவார்ந் தவர்கள்; இலக்கியம் பற்றிய நிச்சயப் பார்வை யுள்ளவர்கள். காலம் அவர்களுக்கு வழங்கிய கவசங்கள் இவை.

'கவிதாசரண்' அப்படிப்பட்ட தர நிர்ணயக்காரர்களைத் தன் வாசகர்களாய் முன்னிலைப் படுத்திக்கொண்டு, தனக்கோர் உருவாக்கமும் செயலூக்கமும் பெறுவதில் மிகுத்த பெருமையே கொள்கிறது; பொறுப்பையும் உணர்கிறது.

இவ்விடத்தில் இதழ் பற்றி ஒரு விவரம் சொல்லலாம் என்று நினைக்கிறேன். அதாவது, 'கவிதாசரணுக்கு' நிர்வாகம் என்று ஒன்று உண்டு. வைராக்கியமான நிர்வாகம். ஆனால், நிறுவனம் என்று ஒன்றும் இல்லை, நிர்வாகம் அறிவார்ந்த திறமையின்மேல் கட்டப்படும் கோபுரம். நிறுவனம் முதலீட்டின் மேல் கட்டப்படும் சரக்குக் கிடங்கு. நிறுவனத்திற்கு வியாபாரம் அடிப்படை. வியாபார வீச்சுக்கேற்றபடி எதனோடும் சமரசம் செய்து கொள்வது எழுதப்படாத சட்டங்கள். நிறுவனம் எனும் பன்முகக் கட்டுக் கோப்புக்கு இவை தவிர்க்க முடியாதவை. ஆனால், நிர்வாகத்திற்கு ஒரு முகம்தான். 'கவிதாசரண்' நிர்வா கத்தின் மூச்சுக் காற்றே இலக்கியத் தேடல்தான். இதற்கு எழுத்தைச் சுகமான அனுபவமாக்கும் இணக்கமான பார்வை உண்டு. இலக்கிய வெளிப்பாட்டின் தரம் பார்க்கவும் நயம் பாராட்டவும் தேவையாகும் மனப் பயிற்சி உண்டு. உண்ணும் உணவுக்கு நெற்குப்பை உதவாதது போல உணரும் மனத்துக்குச் சொற்குப்பையும் உதவாது என்னும் தெளிவும் உண்டு. எதன்

www.padippakam.com



பொருட்டும் மலினத்தோடு சமரசம் கொள்ளாத ஒருமையுணர்வும் உண்டு. வேண்டுவதெல்லாம் வாசகர்களின் ஆதரவுதான்.

இதழ் பற்றிய தெளிவான அபிப்பிராயத்தை உங்களிடம் உருவாக்கத்தான் இவ்வளவயும் சொல்லத் தோன்றியது.

'கவிதாசரணின்' முதன்மையான ஆசை புதிய எழுத்தாளர்களை இனங்கண்டு வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான். எவன் ஒருவன் எழுதும்போது அவன் இருதயம் கைவிரலில் துடிக்கிறதோ, எவன் ஒருவன் தனக்கென்று ஒரு மொழி தேடி அதில் தன் முகம் பார்த்துக் கொள்கிறானோ, எவன் தன் எழுத்தில் தன்னைத் தரிசித்துக்கொள்கிறானோ, அவன்தான் படைப்பாளன், அல்லவா? அப்படிப்பட்ட படைப்பாளர்கள் நம் மண்ணில் அநேகம் பேர் இருக்கிறார்கள். பத்திரிகைச் சந்தையில் விலை போக மாட்டாதவர்களாகவோ, விலைபோக விரும்பாதவர்களாகவோ, இன்னும் புதியவர்க்ளாகவே, கூர்மையானவர்களாகவே தங்களைத் தற்காத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இலக்கிய மானஸ்தர்களையெல்லாம் அவர்கள் எழுத்தொன்றையே அடையாளமாகக் கொண்டு இனங் கண்டு வெளிப்படுத்த வேண்டும் என்பது இதழின் முதன்மையான நோக்கம். ஆகவே, அப்படிப் பட்டவர்களை உங்களில் தேடுங்கள்; இதழோடு உறவு கொள்ள வையுங்கள்.

நீங்கள் அனுப்பும் படைப்புகள் ஒவ்வொன்றும் எங்கள் பரிசீலனைக்குட்படும். தகுதியானவை வெளியிடப் படும். வெளியாகவில்லையெனில் உங்கள் வளர்ச்சிக்காகக் காத்திருக்கிறோம்.

ஒன்றை நினைவில் வையுங்கள்: ''கவிதாசரணை நீர்த்துப் போக வைக்கும் எழுத்துகள் எக்காரணம் கொண்டும் அதில் இடம் பெறக் கூடாது,'' என்பதில் உறுதியாயிருங்கள்; அவை உங்களுடைய எழுத்துகளே என்றாலும் கூட.

முடிவாக ஒரு வேண்டுகோள். முக்கியமான வேண்டுகோள்.

இது ஓர் இலக்கிய இதழ் அல்லவா? ஆகவே, இதன் வளமும் வளர்ச்சியும் வாசகர்களாகிய உங்கள் கைகளில்தான் உள்ளன. தன் பச்சிளம் குழந்தைக்கு 'இது பசிக்கும் நேரம்' என்பதை நினைவில் வைத்துப் பாலூட்டும் பரிவு மிக்க தாயைப் போல, இதழின் வளர்ச்சியில் நீங்கள் பங்கு பற்ற வேண்டும். **இதில் சுணக்கம் காட்டிவிட்டு, இலக்கிய விசாரம்கொள்வதில் என்ன சுகம் இருக்க முடியும், சொல்லுங்கள்!**

படிப்பகம்

www.padippakam.com

ஆசிரியர் பக்கம்

# இன்றைய மானிடன்

சக்தியும் சிவனும் திடீ ரென்று ஒரு நாள் தாங்கள் படைத்த உலகத்தைப் பார்க்க விரும்பினர்.

உடனே தங்கள் ரிஷப வாகனத்தில் ஏறிக்கொண்டு வான் வழியாக உலகை வலம் வரக் கிளம்பிவிட்டனர்.

உலகையே படைத்தவர்கள் என்றாலும், ஆணும் பெண்ணுமாக இணை போட்டுக்கொண்டு கிளம்பியதும் அவர்கள் மனதில் தம்மையே மறக்க வைக்கும் ஓர் உல்லாசம் கிளர்ந்தது.

அதன் காரணமாக, உலகளாவி நிற்கும் காற்றுப் படலத்தை மெல்ல மெல்லச் சல்லடைக் கண்களாய்த் துளைக்கக்கூடிய ஒரு விஷ அலை மெல்லப் பரவுவது அப்போது அவர்கள் கவனத்திற்கு வரவில்லை.

ஈசனாவது பரவாயில்லை; 'சுருக்'கென்றால் மலர்ந்திடுவார்.

தேவியோ மானிடப்பயிராகவே ஞாபகமாய் மறந்திருந்தாள்.

ரிஷபம் மட்டும் அவர்களின் நிஜத்தைச் சுமந்து செல்லும் ஞான மௌனியாய் வழி பார்த்துச் சென்றது.

சிறிது தூரம் சென்றதும் அவர்கள் மிதந்து செல்லும் வழியில் ஒரு பாதை குறுக்கிட்டது.

குண்டும் குழியும், புழுதியும் சரளையுமான பாதை.

அதன் வழியே அப்போது ஒரு தொழுநோயாளி மிகவும் விட்டேற்றியாக உருண்டு போய்க்கொண்டிருந்தான்.

அவனுக்குக் கால்களோ கைகளோ சொல்லிக் கொள்ளும் படியாக இல்லை.

காது, மூக்கு, நெற்றி என ஒன்றுமே உருப்படியாக இல்லை.

தொழுநோய் அவனை நன்றாகவே தின்றுவிட்டது.

அவன் முகத்தில் முழுமையாக இருந்தவை அவனுடைய இரண்டு கண்களும் பளீரென்ற பல் வரிசையுமே.

விகாரமாய் அழுகிப் புழுத்துப் போன உடம்பில் கண்களும் பற்களும் முழுமையாய் இருப்பதே பயங்கரமான தோற்றத்தைக் கொடுத்தது.

ஈசனார் 'சுருக்'கென்று மலர்ந்துவிட்டார்.

அவனிலிருந்து புறப்படும் துர்நாற்றமே காற்றுப் படலத்தை விஷ அலையாய் நனைக்கிறது என்பது நன்றாகவே விளங்கியது.

ரிஷப வாகனத்தில் ஈசனின் சரிபாதியாய் ஒட்டி மகிழ்ந்து உலகைப் பார்த்துக்கொண்டு வந்த லோக நாயகியின் கண்களில் அந்தத் தொழுநோயாளி பட்டதுதான் தாமதம்.

என்ன பயங்கரம்! என்ன கொடுமை!

சர்வேஸ்வரி நடுங்கிப் போய்விட்டாள்.

அவள் தாயுள்ளம் இக்கோரத்தைக் காணச் சகிக்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



உடனே ஈசனைப் பார்த்து, ''சுவாமி, உங்கள் படைப்பில் இப்படியொரு கோரமா? உங்களால் எப்படி இதைச் சகித்துக் கொள்ள முடிகிறது?'' என்று பதறிப்போய்க் கேட்டாள்.

ஈசனார் மிக்வும் நிதானமாகப் புன்னகைத்தார்.

''தேவி, நான் படைத்த போது நன்றாகத்தான் இருந்தான். 'கமகம' வென்று மண் வாசனையோடுதான் பிறந்தான். அவன் வாழத் தொடங்கிய பிறகுதான் இவ்வாறு ஆகிவிட்டான். ஒவ்வொரு பிறவியிலும் தன் மேல் உள்ள மண்ணைக் கழுவுவதாக எண்ணிக் கொண்டு தன்னையே கரைத்து விட்டான். பூண்களால் அலங்காரம் செய்து கொள்வதாக எண்ணிக்கொண்டு புண்கள் தன்னை உண்ணக் கொடுத்து விட்டான். அவன் வாழ்க்கையை அவன் வாழ்கிறான். இதில் தலையிட எனக்கேது அதிகாரம்? எனக்கும் பாவமாகத்தான் இருக்கிறது.''

தேவி சற்று நிதானிக்க முயன்றாள்.

எனினும், தாய்மை அவளைத் தடுமாற வைத்ததனால் அழுகையும் ஆத்திரமுமாகப் பேசினாள்:

''இப்படிச் சொல்லி என்னை ஏமாற்றாதீர்கள். உங்களால் ஆகாததும் உண்டா? உங்களை மீறி ஓர் அணுவும் அசையுமா? என் பெற்ற மனம் பேதுறுகிறது. அருள் கூர்ந்து அவனுக்கு உதவி செய்யுங்கள். இல்லையென்றால் நான் இங்கிருந்து நகரப் போவதில்லை.''

ஈசன் மெலிதாக நகைத்தார்.

''எல்லாம் தெரிந்தும் தெரியாதவளைப் போல் பாசாங்கு செய்கிறாய். நல்லது. நாம் ஒன்று செய்யலாம். இதோ பார், பொற்காசுகள் அடங்கிய பை. இதனை அவன் உருண்டு வருகின்ற வழியில் போடுவோம். இக் காசுகளைக் கொண்டு அவன் தன்னைக் குணப்படுத்திக் கொள்ளட்டும். பூலோகத்தில்தான் இப்போது ப்ளாஸ்டிக் சர்ஜரியெல்லாம் அமர்க்களப்படுகிறதே. இவன் புதிய வடிவம் எடுக்கட்டுமே. வேண்டியது பணம்தானே. நாம் பொன்னாகவே போடுகிறோம். சரிதானே?''

தேவியும் உடனே ஒத்துக்கொண்டு, ''போடுங்கள், சுவாமி. அவன் நிச்சயம் பிழைத்துக் கொள்வான்,'' என்றாள்.

ஈசன் பொற்கிழி அடங்கிய பையை அவனுக்கு முன்னால், அவன் உருண்டு வரும் வழி மேல் போட்டார்.

படிப்பகம்

www.padippakam.com

ஈசனும் தேவியும் ஆவலோடு 'என்ன நடக்கப் போகிறது' என்று பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

நம்முடைய கதாநாயகன் மிகவும் எச்சரிக்கையோடு உருண்டு வருகிறான்.

இப்போது அவன் மனதில் பழைய ஞாபகங்கள்.

அரசனைப் போல வாழ்ந்தான்.

வகைதொகயில்லாமல் ஒரு வக்கிர வேட்கையோடு தேடிக் கிடைத்ததையெல்லாம் அனுபவித்தான்.

இப்போது கையில்லாமல், காலில்லாமல், அங்கமெல்லாம் குறைந்து, அழுகிப் புழுத்து, இப்படி வாழ நேர்ந்துவிட்டதே என்று ஒரு தன்னிரக்கம்.

இந்த நிலையிலும் அவனுக்கொரு திருப்தி.

எல்லா உறுப்புகளும் போனாலும் கண்கள் இருப்பதால் அல்லவா வழி பார்த்து உருண்டு போக முடிகிறது!

''சரி. இந்தக் கண்களும் ஒரு நாள் போய்விட்டால்? எப்படி வழி தெரிந்து உருண்டு செல்வது? நல்ல வேளை. இப்பொழுதே இந்த நினைப்பு வந்ததே! கண்ணில்லாவிட்டாலும் வழி தவறாமல் உருண்டு செல்ல இப்போதே, இந்த நிமிஷமே பயிற்சி எடுத்துக் கொள்வோமே.''

தன் எண்ணத்தை உடனடியாகச் செயல்படுத்தினான்.

தன் இரண்டு கண்களையும் இறுக மூடிக்கொண்டு தட்டுத் தடுமாறி உருண்டு போகத் தொடங்கினான்.

மேடு பள்ளங்களில் உருண்டு போகும்போது பாதையிலிருந்து சற்று விலகி விட்டான்.

பொற்கிழிப் பை கிடந்த இடத்திலிருந்து அவனுடைய புதிய பாதை சற்று விலகிவிட்டது.

பையை விட்டு ஒதுங்கினாற்போல் சிறிது தூரம் உருண்டு சென்ற பின் கண்களைத் திறந்து பார்த்தான்.

''பரவாயில்லை. பாதையை விட்டு அப்படியொன்றும் விலகிப் போய்விடவில்லை. மீண்டும் மீண்டும் பயிற்சி எடுத்துக் கொண்டால் பிழைத்துக் கொள்ளலாம்,'' என்று நம்பிக்கை கொண்டவனாய்த் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

''பார்த்தாயா, தேவி?'' என்றார் ஈசனார்.

''பார்த்தேன், சுவாமி. பாவி, கண்களை மூடிக்கொண்டானே. அவன் வாழ்க்கையை அவன் வாழ்ந்துதான் தீரவேண்டும். அவன் அதற்குத் தயாராகவும் இருக்கிறானே.''

''அவனை இன்னமும் தெரியவில்லையா, தேவி?''

''யார் சுவாமி?''

''அவன்தான் இன்றைய மானிடன்.''

படிப்பகம்

www.padippakam.com



## விண்டுரைக்க

பனியின் துளிகள் வயிர மகுடம்
மலருக்குத்தான் சூட்டும்—அதில்
பகலின் கதிரே தகதகென்று
தன்முகத்தைக் காட்டும்!
கனி குலுங்கும் தோப்பு நிழலும்
பின்னிடும் பார் வலையே—அந்தக்
கரியவலையில் மீன்கள் போலும்
உதிரும் பூக்கள் நிலையே!

தினம் உதிக்கும் கதிரும் வானும்
புதுமை புத்தம் புதுமை—காட்சி
சிறிது கண்கள் பார்த்தால் நாமும்
பதுமை நல்ல பதுமை!
கனவு நூறெழுப்பும் இயற்கை
காட்சி விருந்து தந்து!—நீ
கண்ட பின்னே விண்டுரைக்க,
கவிதை பாட முந்து!

/மின்னூர் சீனிவாசன்/

★ ○ ★

## மாபெரும் கவிதைத் தொகுப்புப் பணி

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் மரபு- புதுக் கவிதைகள் தொகுப்புகள் வெளிவரவிருக்கின்றன.

கவிஞர்களே! ஆர்வலர்களே! நீங்கள் வெளியிட்ட தொகுப்புகளை உடனடியாக அனுப்பி இப் பணியை முழுமையுறச் செய்யுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

முனைவர் இரா.கோதண்டராமன்
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்,
19, சின்ன சுப்பராய பிள்ளை வீதி, புதுவை-605001.

படிப்பகம்

www.padippakam.com

# நான் மந்திரி ஆகிவிட்டேன்

உற்றுப் பார்த்தால்
அழுக்குத் தெரியும்
உதட்டுச் சிரிப்போடு,
அங்குமிங்கும் அலையும்
அரசாங்க அதிகாரிகள்.

என் வீதியில் நுழைய
அரசாங்கக் காரும்
திணறுகிறது.

என்ன வியப்பு!
சென்ற மாதம்
என் சட்டையைப் பிடித்து
உலுக்கிய போலீஸ் அதிகாரி,
சிறுநீர் கழிக்கும்
எனது மகனின்
சட்டையைக் கழற்றிச்
சந்தோஷப் படுத்துகிறாரே!

புழுக் கூட்டமாய்
குவிந்து கிடக்கும்
பூமாலைகள்.

நான்
மந்திரி
ஆகிவிட்டேன்!

என் புருவத்தில்
ஒட்டிக் கிடக்கும்
பூவிதழ் துடைக்க
தன் அங்கவஸ்திரம் நீட்டும்
ஆலை முதலாளி.

பழக்கூடைகளை
அடுக்கியபடி
போதைச் சிரிப்போடு
மோதிர விரல் குவிக்கும்
பிராந்திக் கடைக்காரர்!

தாய்மொழியும்
சரியாய் எழுதத் தெரியாத
தற்குறி நான்.
எனக்கு ஏவல் புரியத்தான்
எத்தனை ஐ. ஏ. எஸ்.கள்!
என்ன அற்புதமான
ஜனநாயகம்!

நாடு நன்றாகவே உருப்படும்!

அப்பாடா, ஒரு வழியாய்
அரசாங்கத்துக் கஜானாவை
என் வீட்டுக்கு
அழைத்தாயிற்று!

இனி, கட்டி வைத்த
கோப்புகளின்
கயிறுகள் அவிழும் போது
கரன்சிகள் உதிரும்!

எந்தக் கதவுக்கு அப்பாலும்
நான் எட்டிப் பார்க்கலாம்;
தாழ்ப்பாள் தடை போடாது.

எனது தோளுக்குத்
துண்டாவதில்
பல நூற்பாலைகளுக்குப்
போட்டி.

என் காருக்குப் பெட்ரோலை
யார் ஊற்றுவது என்பதில்
சாராய வியாபாரிகளுக்குள்
சர்ச்சை!

கெட்டிக்கார மனைவி,
நான் மந்திரியான மறுகணமே
ஐந்தாறு முதலாளிகளிடம்
அச்சாரமே வாங்கிவிட்டாள்.
மகனுக்கு மாருதி வேண்டுமாம்.
புறம்போக்கு நிலம் குறித்துப்
புலன் விசாரிக்கப்
புறப்பட்டுப் போனான் தம்பி!

தாத்தாவின் பெயரில்
'ட்ரஸ்ட்' ஒன்று துவங்க
மிக அற்புதமாய்
யோசனை சொன்னாள்

படிப்பகம்

www.padippakam.com



மைத்துனி!

நான்
மந்திரி
ஆகிவிட்டேன்!

கோஷங்களால்
எனது மௌனம்
காயப் படுகிறது.

கும்பலில்
எனது தனிமை
காணாமல் போகிறது.

அதனால் என்ன?

கற்பகமரம்,
காமதேனு,
அற்புதவிளக்கு,
இவை
கேட்டதைத்தான் தருமாம்.

மந்திரி பதவியோ
கேளாத சலுகைகளையும்
காலடியில் குவிக்கிறதே!

வெகு ஜன சேவைக்குப்
பதவி ஒரு வாய்ப்பு
என்பதெல்லாம், வெறும்
பம்மாத்து வார்த்தைகள்.

அது
சுயநலம் தூக்கிப்பிடிக்கும்
தூண்டில்.

இந்த இரும்புத்திரைக்குப்
பின்னால் தான்
ஜனநாயகம்.
கள்ளச்சாவி செய்கிறது!
சட்டங்களை உடைக்கும்
சம்மட்டிகளுக்குப்
பிடிகள் போடப்படுகின்றன!

இப்போது
எனது வானம்
வெளிச்சமானது.

சூரிய சந்திரருக்குப்
பரம சந்தோஷம்;
என் வானில் பிரகாசிப்பதால்.

நான் தட்டாமல்
திறக்கின்றன;
கேட்காமல் கொடுக்கின்றன;
தேடாமல் கிடைக்கின்றன.

இனி கவலை இல்லை.
நீண்ட நாள் வியாதிக்கு
மருத்துவம் பார்க்க
மேலை நாடு போகும்
வாய்ப்பு கிடைத்துவிட்டது!

''பதவியால்
சேவை என்ன செய்தாய்
என்பதல்ல முக்கியம்.
என்ன சம்பாதித்தாய்
என்பதே முக்கியம்.''
மாஜி மந்திரி
மந்திரம்போல் காதில் ஓதினார்.

உண்மைதான்.

இப்போது,
எனது காடுகளில் வசந்தம்.
இயன்ற மட்டும்
பூப்பறிக்க வேண்டும்.
எனது நதியில் பிரவாகம்;
இயன்ற மட்டும்
மீன் பிடிக்கவேண்டும்.
எனது ராஜவீதி நெடுகிலும்
சாமரம் ஏந்திய
பாமரக்கரங்கள்.
இந்த ஜுடாசையும்
ஏசுவாய்த் தொழுவதற்கு

படிப்பகம்

www.padippakam.com

எத்தனை பாவக் குமாரர்கள்!
என் தாகம்
தேனால் தணிய வேண்டுமாம்.
கரிசனம் கொண்ட தேனீக்கள்
பூக்கள் தோறும் அலைகின்றன,
எனது கிளைகளில்
தேன் கூடு கட்ட!

காக்கைச் சிறகை நான்
மயிலிறகு என்றால்,
கரம் தட்டி வரவேற்க;
நான் பார்த்து
வானவில்லுக்கு
எட்டு நிறமென்றால்,
ஆமென்று ஆமோதிக்க;
என்னைச்
சுற்றிலும் ஒரு கூட்டம்.
நான் மந்திரி ஆகிவிட்டேன்!
வரன் பார்த்துப்
பெண்ணுக்குச் சீக்கிரமாய்
மணம் முடிக்க வேண்டும்;
சவரன்கள்
குவியுமே, அதற்குத்தான்!
ஏற்றிவிட்ட
ஏணிப் படிகளுக்கு
ஏகப்பட்ட மகிழ்ச்சி;
நான் அவர்களின் ஜாதியாம்.
பாவம், மிதி படுவதையே தமது
மகத்துவமாய் நினைக்கும்
இந்தப் பாவப்பட்ட
ஜென்மங்கள் வாழ்க!
மறந்தே போனேன்
வைப்பாட்டி இல்லாமல்
ஒரு மந்திரியின் வாழ்க்கையா?
முதலில் வாலிப மிடுக்கோடு
ஒருத்தியைத் தேடவேண்டும்.

நான்
மந்திரி ஆகிவிட்டேன்!

**/துறவி/**

## ஓ! நம்பிக்கையே...

சுவர்களுக்குள்- நினைப்பாய்,
ஊரை, உலகைச்
சுற்றிச் சுற்றி!
சுற்றிலும் நெருப்பாய்,
என்னைச் சுற்றி!
சுழன்று சுழன்று
விசிறியடிக்கும்
சூறைக் காற்று!
அனலான தகிப்பாய்,
மண் மீது!
பரந்து, விரிந்து,
சீறிச் சினந்து
உள் புகும்
பெருங்கடல்.
ஓரம் ஒதுங்கி
வெறிக்கும் நான்.
இடி மின்னலுடன்
குமுறும் வானம்,
கண்ணீர் கசியும்
மழைத் துளிகளாய்.
அழுது,... அடங்கி...
தெளிவுடன் எழும்
'மனம்.'

ஓ! நம்பிக்கைத் தோழீ!
நீயும் நானும்
இணைந்து நிற்போம்-என்றும்
ஒருவருக்கொருவர்
மதுரம் பகிரும்
துணையாக!

**/இரா.ஆனந்தி/**

படிப்பகம்

www.padippakam.com



# காற்றின் நாயகன்

'எத்தனை பாடல் ஏழு ஸ்வரங்களுக்குள்?'

கேள்வி!

'எத்தனை கேள்விகள் இதயச் சுரங்கத்தில்?'

மீண்டும் ஒரு கேள்வி,

ஒவ்வொரு மனிதனின் இதயத்துள்ளும் புதைந்து கிடக்கும் மருமக் கேள்விகளுக்குக் கணக்கேது?

புள்ளிக்குள் பூஜியமும், பூஜியத்திற்குள் புள்ளிகளும் மறைந்து கிடப்பது போல, மனித இதயத்துள் கேள்விகள் புதைந்துள்ளன.

ஸ்வரங்களுக்குள்ளும் அவ்வாறே.

ச ரி க ம ப த நி— ஏழு.

ஏழிலிருந்து ஏழாய், ஏழுக்குள் ஏழாய், ஒவ்வொன்றும் புதைந்து, கிளர்ந்து, முளைத்தெழும்போது விளைகின்ற பண்கள் எண்ணத் தொலையாதன

கேள்விகளால் நிறைந்த இதயச் சுரங்கத்தைப் போல் இசையும் சுரங்கம்தான்.

ஒன்பது ஓட்டையிட்டு, ஒரு துளிக் காற்றை வைத்து உயிரைப் படைத்துவிட்டான் இறைவன்.

ஏழு துவாரங்களிட்டு, ஒரு துளிக் காற்றைக் கொண்டு இசையைப் படைத்துவிட்டான் மனிதன்.

கையளவு இதயத்துள் கடலளவு ஆசைகளை—கேள்விகளைச் சுமந்துகொண்டு நடமாடும் மனிதர்களைக் காண்கிறார் கண்ணதாசன். சாரி சாரியாகச் செல்லும் பிள்ளையார் எறும்புகளைப் போலப் பரபரப்பாகத் திரியும் நகரத்து மனிதர்களைக் கண்ணுறும்போது அவருள் மீண்டும் ஒரு கேள்வி கிளைக்கிறது.

'காணும் மனிதருக்குள் எத்தனை சலனம்?'

சலனம்— ஆக்கத்தின் சக்தி.

காற்றின் சலனத்தில் இன்பத்தையும் துன்பத்தையும் கண்டவன், ஒளியின் சலனத்தில் உயிர்ப்பைக் கண்டவன், நீரின் சலனத்தில் வட்டத்தைக் கண்டவன், வாழ்க்கைச் சலனத்தில் வழிமுறைகள் கற்று வரலாறு படைத்தவன், சலனத்தால் ஆன உலகத்தைச் சஞ்சலப்படுத்தியவன்-படுத்துபவன் மனிதன்தானே!

படிப்பகம்

www.padippakam.com

இவர்கள் மனிதருள் மனிதர்கள்; மானிட தர்மத்தைப் பாடி வைத்தவர்கள்; காலகாலங்களின் கைக்கூப்புதலுக்கு இலக்கண மானவர்கள்.

கவிஞர் தம் காலத்து மனிதர்களுள் பார்க்கிறார்.

'கற்காலம் நோக்கிக கற்றாரை ஒட்டும் தற்கால நாகரிக' மனிதருள் பார்க்கிறார்.

நாகரிக நச்சுக் காற்றைச் சுவாசித்து, கூடு கட்டிப் போன இவர்கள் இதயத்துள் செயலூக்கச் சலனங்கள் இல்லை. வெட்டி முறித்துக் கட்டி முடிக்கும் சலனங்களும் இவர்களுள் இல்லை.

அடுத்த வீட்டு அந்தப்புரத்தில் நேற்றிரவு கேட்ட கிசுகிசுப்பு பற்றிய சலனம்.

அவர்களது அந்தரங்க ஒலிகள் இன்னதுதான் என்று அடுத் தவரோடு பேசி முடிவு காண்பதில் சந்தோஷம்.

சத்தத்தை அசுத்தமாக்கிப் பார்க்கும் சலனம்; கொச்சை இன்பத்தையே சுகமெனக் கருதும் மனிதர்கள்.

'காணும் மனிதருக்குள் எத்தனை சலனம்—வெறும்
கற்பனை சந்தோஷத்தில் அவனது கவனம்.'

நயத்தக்க மானிட தர்மம்- மானிட சலனம் அழுகத் தொடங்கியிருப்பதை 'கவனத்'தில் கொண்டே 'கவனம்' என்ற சொல்லை அங்கே பயன்படுத்தியிருக்கிறார்.

காற்றின் சலனத்தில் இவ் வரிகள் மிதந்து வந்து 'வானொலி'க்கையில் செவி மடுங்கள். கேள்வியின் நாயகனின் கேள்வியும் பதிலும் சிந்திக்கத் தூண்டும்.

○

இன்பம்—துன்பம்!

வாழும் காலத்தின் வாழ்க்கை எல்லைகள்.

அந்த இரு எல்லைகளையும் தொட்டுச் சுவைத்துத் திளைத் தவர் கண்ணதாசன்.

சோகத்தின் நிறம் குன்றாமலும் சுகத்தின் நிறை சிதறா மலும் முத்திரை பதித்துத் தந்தவர் கண்ணதாசன்.

அதனால்தான் 'மனித வாழ்வில் என்னென்ன நேர்ந்தாலும் என் பாடல் அதனை எதிரொலிக்கும்' என்று கூற முடிந்தது.

படித்தவர்களுக்காக மட்டும் கவிஞர் தன் திறமையைக் காட்டவில்லை. கேட்ட மாத்திரத்தில் பாமரனும் புரிந்துகொள் ளும் வண்ணம் மனத்தில் பதித்துக் கொள்ளும் பாங்கில் தனது வல்லமையை அவர் வெளிப்படுத்தினார்.

'முன்னோர் மொழி பொருளே அன்றி அவர் மொழியும் பொன்னே போல் போற்றி' தனது முன்னோர்களது கடினமான

படிப்பகம்

www.padippakam.com



கவிதை வரிகளை எடுத்தாண்டு, எளிமையாக்கி, அவர்களுக்கும் புகழ் சேர்த்திருக்கிறார்.

'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற வள்ளுவரை,

'துன்பம் வரும்போது நீங்க
சிரிங்க—என்று
வள்ளுவரு சொன்னாரு
சரிங்க' என்,

குறளை மட்டுமே அல்லாது, அதை வரைந்த வள்ளுவரையும் கழனியில் பணி புரியும் முருகாத்தாளுக்கும், கன்று காலி மேய்க்கும் முருகப்பனுக்கும் அறிமுகப் படுத்தி வைத்தார்.

கவிஞர் தமது வாழ்க்கை வாணிபத்தில் கொள்முதல் செய்திருந்த அனுபவங்கள் அனைத்தும் 'தொட்டனைத்தூறும் மணற்கேணி' போன்றவை.

பட்ட பின்பு பெற்ற அனுபவ ஞானத்தைப் பதிவு செய்து விடுவது என்பது எல்லோருக்கும் கைவந்து விடுவதில்லை.

பிறர் சாவதைப் பார்த்துச் சாவைப் பற்றிப் பலரும் எழுதி வைத்திருக்கிறார்கள்.

தானே 'செத்து'ப் பார்த்த அனுபவம் உண்டா?

அந்த மகத்தான அனுபவத்தையும் கவிஞர் பெற்றிருந்தார்.

எனவேதான் 'என்னடா பொல்லாத வாழ்க்கை?' என்று பல்லவி எழுத முடிந்தது.

—வளரும்

**/இராம. கண்ணப்பன்/**

---

சித்திரம் என்பது மௌன கவிதை; கவிதையோ பேசும் சித்திரம்.
— சிமோனைட்ஸ்.

என்னைச் சங்கடப்படுத்துவது பைபிளில் எனக்கு விளங்காத பகுதிகள் அல்ல; மாறாக, என்னால் விளங்கிக் கொள்ள முடிந்த பகுதிகள்தாம்.
— மார்க் ட்வைன்.

பைபிள் நமது பக்கத்து வீட்டாரை நேசிக்கச் சொல்கிறது; மேலும் பகைவர்களையும் நேசிக்கச் சொல்கிறது. ஒருவேளை பக்கத்து வீட்டாரும் பகைவரும் ஒருவராகவே இருப்பதாலோ என்னவோ.
— ஜி.கே.செஸ்ட்டர்டன்.

படிப்பகம்

www.padippakam.com

# அகமும் புறமும்

அவன் ஒரு கவிஞன்' கவிஞன் என்றால் இலேசுப் பட்ட கவிஞனல்லன்' 'காதல் கவிவேந்தன்.' காதலைப்பற்றி இதுவரை அவனைப் போலப் பாடிய கவிஞன் ஒருவன்கூட இல்லை; இனிமேலும் இருக்க மாட்டான். அதன் காரணமாகவே அவனுடைய இயற்பெயரும் புனைப்பெயரும் வழக்கொழிந்து போயின. 'காதல் கவிவேந்தன்' என்பதே அவன் திருநாமமாகி விட்டது. அந்தப் பெயர் அவனுக்குப் பொருந்தியதில் உள்ள மற்றொரு விசேஷம் என்னவெனில், காதலையும் மாதரையும் விட்டால் அவனுக்குக் கவிதை எழுத வராது என்பதே. துரும்பைப் பற்றி எழுதினான் என்று வைத்துக் கொள்வோமே. அதுவும்கூட ஒரு காதல் காவியமாகத்தான் பெயர் வாங்கும். காதலை ரசமாக்கித் தனது பேனாவில் அடைத்துக்கொண்டு எழுதுவானோ என்னவோ.

மொத்தத்தில், 'காதல் கவிவேந்தன்' என்னும் பெயர் காட்டுத் தீயைப்போல் நாட்டு மக்களிடம் பரவி விட்டது. அவனுடைய புகழ் வானத்தை முட்டிக்கொண்டு மல்லாடியது. அதில் அவனுக்குக் கொள்ளைப் பெருமை. எனினும் அந்தப் புகழ் மணக்கும் பெயரைக் கட்டிக் காக்கவேண்டுமே, காற்றுப் போன பலூனாகிவிடக்கூடாதே என்று எண்ணும் போது அவனுக்குக் கவலையாகத்தான் இருந்தது. காரணம், கவிஞனுக்கே வேண்டிய தனிமை அவனுக்கு அபூர்வப்பொருளாகி விட்டதுதான். போதாக்குறைக்குப் பத்திரிகைகளில் கொட்டை எழுத்தில் வெளி வந்துவிட்ட ''காதல் கவிவேந்தனின் கற்கண்டுக் காவியம். விரைவில் எதிர்பாருங்கள்'' என்ற விளம்பரம்வேறு சேர்ந்துகொண்டது. அவனோ தன் காவியத்திற்குப் பிள்ளையார் சுழிகூடப் போடவில்லை. புரிந்தோ புரியாமலோ பிள்ளையார் சுழி போட்டுத் தொடங்கும் பழக்கம் அவனுக்கிருந்தது மற்றுமோர் விசேஷம்.

இப்படிபட்ட நிலையில் ஒரு நாள் காலைப் பத்திரிகைகளைப் பிரித்த மக்கள், ''காதல் கவிவேந்தன் எங்கே? திடீர் என்று காணாமல் போன மர்மம். தேடிக் கண்டுப்பிடிக்கப் போலீசார் தீவிரம்,'' என்னும் செய்தியைப் பார்த்துப் பரபரப்படைந்தனர். எங்கு திரும்பினாலும் அதே பேச்சு. பத்திரிகைகள் கொள்ளை போவது போல் விற்பனை ஆயின. பரபரப்புக்குரிய செய்தியாகி விட்ட நமது கவிஞனோ மெய்யாகவே காணாமல் போய், இரண்டு நாட்களுக்குப் பிறகு எட்டாத தொலைவில் உள்ள ஓர் அப்பழுக்கற்ற அசல்பட்டிக் காட்டில் தோன்றினான்.

படிப்பகம்

www.padippakam.com



பாவம், தனிமையின் தேவை அவனை அப்படித் தள்ளிக் கொண்டு வந்து விட்டது.

அந்தப் பட்டிக்காட்டில் அவனைத் தெரிந்து கொள்ளக் கூடியவர்கள் மருந்துக்குக் கூட ஒருவரும் இல்லை என்பதை அறிந்தபோது அவனுக்குச் சற்று ஆற்றாமையாகத்தான் இருந்தது. வானை இடித்துக் கொண்டு தன்னுடைய புகழ் வளர்ந்து விட்டதாகப் பெருமையடைந்தவனுக்கு அவனுடைய பெயரையே கேட்டறியாத இடமும் தன் சொந்த மண்ணிலேயே இருப்பதைக் கண்டால் ஆற்றாமை ஏற்படாதா? எனினும் அதுவே அவனுடைய தனிமைக்குக் கவசமாயிருந்ததால் மனத்தைத் தேற்றிக் கொண்டான். அந்த அருமையான வாய்ப்பை நொடிக்கு நொடி பயன்படுத்தி, அதன் மூலம் அந்தப் பட்டிக்காட்டு மண்ணுக்கே தன் கால் பட்டதால் ஒரு பெருமை வரச் செய்ய வேண்டும் என்று சங்கல்பம் செய்துகொண்டு காரியத்தில் சூரத்தனத்தைக் காட்ட முனைந்தான்.

அது பட்டிக்காடுதான் என்றாலும் அழகான பட்டிக்காடு. அமைதியான ஊர். ஊரைச் சுற்றிப் பசுமையான வயல்கள். ஊருக்கு மேற்கே இரண்டு குன்றுகள். குன்றுகளின் உச்சியில் கோயில்கள். குன்றுகளின் அடிவாரத்தில் பிறந்து ஊரின் வடகரையில் ஓடும் அழகான சிற்றாறு. ஆற்றின் நீரோரட்டத்தையடுத்துத் தண்ணென்ற மணற்பரப்பு. அதன் மேல் விழுது பாய்ச்சிக்கொண்டு தோப்பாக மண்டிக் கிடக்கும் செந்தாழைப் புதர்கள். மொத்தத்தில் ஓர் அழகின் விரிப்பு.

நமது கவிஞன் அந்தத் தாழைப் புதர்களைக் கண்டதும் சொக்கிப்போய் விட்டான். தன் காவியம் அந்தப் புதர்களுக்கு நடுவேதான் ஜனிக்கவேண்டும் என்று தீர்மானித்தவனாய் அங்கேயே உட்கார்ந்து எழுதத் தொடங்கிவிட்டான்.

காவியம் கிடுகிடுவென்று வளர்ந்தது. காதற் காவியங்களிலெல்லாம் தன்னுடையதே மணிமகுடமாய் 'டால்' அடிக்கப் போவதை எண்ணிப் பரவசப்பட்டுக்கொண்டே, கற்கண்டுகளை அடுக்குவதைப் போலச் சொற் செண்டுகளை அடுக்கிக் காதல் மாளிகையைக் கட்டினான்.

மூன்று நாட்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட வரிகள் வரைந்து தள்ளி விட்டான். நான்காம் நாள், நாயகன் நாயகிக்காகக் காத்திருக்கும் கட்டம். கவிஞன் வெகு ரசனை

படிப்பகம்

www.padippakam.com

யோடு எழுதிக்கொண்டே போனான். நாயகியின் அங்க லட்சணங்களை வர்ணிக்கிறான் நாயகன். அதுபோன்ற வர்ணனைகள்தான் நமது காதல் கவிஞனின் ஜீவரசம். காதலுக்கு மூலம் தெரியாதவர்கள் சிலர் அவனுடைய கவிதைகள் விரசமாய் இருப்பதாக முணுமுணுப்பதுண்டு. பாவம், அப்பாவிகள். வசனத்தில் சொல்ல வாய் கூசுவதையெல்லாம் கவிதையில் சத்தியத்தின் முத்திரை வைரங்களாய் ஜொலிக்க வைக்கலாம் என்ற சதைப் பிடிப்பான உண்மை நம் கவிஞனுக்கல்லவா தெரியும்?

வர்ணனை முடிந்து நாயகன் ஆசை நளினமாய் வெளிப்பட்டபோது புதரினூடே ஏதோ சலசலப்புக் கேட்டுத் தலை நிமிர்ந்தான் கவிஞன். அவன் கண்களை நம்பவே முடியவில்லை. அவன் இது வரை வர்ணித்த நாயகியே போல் அங்கே ஒரு பெண். இளமை கொழுவிருக்கும் பருவமும் செழுமை மினுமினுக்கும் சதைப் பற்றும் விம்மிப் புடைத்த பூரிப்புமாக கவிஞனுக்கு நேரே சற்றுத் தொலைவில் சாய்ந்து வளர்ந்திருந்த தாழை மரத்தின் மேல் ஏறி நின்று காட்சி தந்தாள் அந்தக் கட்டழகி. கால்களை எம்பிக் கைகளை நீட்டித் தாழை மடல்களை விலக்கிக் கொண்டு, பூவுக்குத் தாவி நின்ற அந்தப் பூவையின் கட்டழகைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவனுள் ஓர் அசுரவேகம் பாய்ந்தது. அந்தக் கணத்தில் அவளே நாயகியாகி, அவனே நாயகனாகி, அங்கே ஒரு புத்துலகம் தோன்றிவிட்டது. தாழைப் புதரின் இருளும் தனிமையும், எழுதிவளர்த்த கதையும் உணர்வும் அவனுள்ளே மோகக் கிறக்கமாய் மூண்டு கனன்றன. கோடானுகோடி ஜென்மங்களாக அவள் அவனைத் தொடர்ந்து வருவதைப் போல ஒரு பிரமை. அவளைக் கண்டு கலந்துறவாடவே அவன் அந்தப் பட்டிக் காட்டுக்கு ஓடி வந்தது போல ஒரு மயக்கம். அவன் கால் பட்டுப் புனிதமடையும் அந்த ஊருக்குக் கூட்டங் கூட்டமாக இலக்கிய பக்தர்கள் யாத்திரை வருவதுபோல ஒரு காட்சி. 'இதோ, இந்தப் பட்டிக்காட்டில்தான் கவிஞன் தன் காதலியைச் சந்தித்தான். இதோ இந்தத் தாழைப் புதரில்தான் அவர்கள் சல்லாபித்தனர்,' என்று அவர்கள் பேசிப் பரவசப் படுவது போல் ஒரு மாயத் தோற்றம்.

"ஆகா! இந்தச் சரித்திரத்தைப் படைத்தே தீரவேண்டும். இந்தப் பூஞ்சிட்டை அணைத்துப் பூவிதழைப் பிரித்துப் போதையுடன் கலந்து... இதோ நான் புறப்பட்டு விட்டேன்,'' என்று நம் கவிஞன் புறப்படத் துணிந்த அந்த வேளையில் 'சொத்' தென்று அவன் தலையில் ஒரு காய்ந்த தாழைச்சருகு விழுந்ததும் பதறியடித்துக்கொண்டு எழுந்து விட்டான். கேவலம் ஒரு சருகு

www.padippakam.com



அவனைப் பயமுறுத்தி விட்டது என்பதை அறிந்த போது வெட்கமாகவும் இருந்தது; ஆத்திரமாகவும் வந்தது. சருகு விழுந்த இடத்தில் ஓர் அரிப்பு. தலையைப் பொத்து விட்டது போன்ற நமைச்சல். அவனுக்கிருந்த ஆத்திரத்தில் தலையைப் பரபரவென்று சொரிந்த வேகத்தில் நகக்கண்களில் சிக்கிக் கொண்டு ஒரு கொத்து மயிர் வந்து விட்டது. அலட்சியமாக அவற்றை உதறியெறியப் போனவன் ஒரு கணம் நிதானித்தான். அவன் கையிடுக்கில் ஒட்டிக் கொண்டிருந்த அத்தனையும் நரைமயிர். வெள்ளிக் கம்பிகளாய் வேர் வரைக்கும் பூத்துவிட்ட ரோமங்கள். திருஷ்டிப் பரிகாரத்திற்குக் கூட அதில் கறுப்பு நிறம் இல்லை!

அதாவது, அவன் கிழவன். தலை நரைத்த கிழவன்.

தடாலென்று தரையில் உட்கார்ந்துவிட்டான் நம் கவிஞன். ராக்கெட் வேகத்தில் பீறிட்டுப் பொங்கிய அவனுடைய மோகவெறியைக் கணத்தில் மோதிச் சிதைத்து விட்டது கையோடு வந்து விட்ட நரைமயிர். அவன் கிழவன். திருடிப் பிழைப்பவன் தன்னை ஒரு திருடன் என்று எப்படி உணர்வதில்லையோ, அப்படித்தான் அவனும் தான் கிழவன் என்பதை அது வரை உணரவில்லை. 'என்ன மதியீனம்! என்ன கேவலம்!' என்று கூனிக்குறுகியது அவன் உள்ளம்.

அப்போது தாழம்பூவும் கையுமாய்ப் புதரை விட்டு வெளியே வந்த அந்தக் கட்டழகி அவனைப் பார்த்துவிட்டாள். பட்டிக்காட்டுக்கே உரிய வெகுளித் தனத்தோடு, ''என்ன தாத்தா, யாரு நீங்க? இங்க என்ன பண்றீங்க?'' என்றாள்.

தாத்தா! ஆமாம். அந்தக் கட்டழகி அவனுடைய பேத்தி போல.

''அடடே, தாத்தா என்னமோ எழுதிக்கிட்டிருக்காங்க,'' என்று அவன் முன்னால் கிடந்த தாள்களைப் பார்த்து ஏதோ காணாததைக் கண்டுவிட்டாற்போல ஆச்சரியப்பட்டாள்.

''ஆமாம் பேத்தி. பாட்டு எழுதியிருக்கேன். இதை எழுதத்தான் பட்டணத்தில் இருந்து இந்தப் பட்டிக்காட்டுக்கு வந்தேன்,'' என்றான். அவள் துள்ளிக் குதித்தோடி வந்து அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

''நீங்க பாட்டுக்காரத் தாத்தாவா? எனக்கு பாட்டுன்னா கொள்ளை ஆசை. கொஞ்சம் பாடிக்காட்டுங்க, தாத்தா,'' என்றாள்.

படிப்பகம்

www.padippakam.com

கவிஞன் படித்தான். அன்றைக்கு எழுதிய வர்ணனைகளையெல்லாம் ஒன்று விடாமல் படித்தான். கடைசியில் கவிதை இப்படி முடிந்தது.

பொன்னே, மரகதமே,
பூவே, புதுத்தேனே,
கன்னல் சுவைப்பாகே,
கற்கண்டே, காவியமே,
என்றெல்லாம் பாடி
இதழுண்ணும் வேட்கையினால்
தென்றலாள் பின் சென்று
தீராத காதலுடன்
கண்ணே எனக் கனிவேன்;
கைவிலக்கி மேல் நடப்பாள்.ப
பெண்ணே எனச் சினப்பேன்;
பொங்கி அழுதிடுவாள்.
'இன்னே இரவழிக'
என்பேன். என் ஆருயிராள்
மின்னைப்போல் வந்தணைத்து
முத்தம் பயின்றிடுவாள்.

முகஞ்சிவக்கக் கேட்டுக் கொண்டிருந்த அந்தப் பெண் சொல்வாள்: "போங்கதாத்தா. ரொம்பப் பச்சைப் பச்சையாய் எழுதியிருக்கீங்க. உங்களைப் பார்த்தா சிவப்பழம் மாதிரி கெம்பீரமா இருக்கீங்க. ஏதானும் சாமிமேலே பக்தியோட பாடுவீங்கன்னு பார்த்தா..."

அவள் சொன்ன விஷயத்தைப் பற்றித் தர்க்கிக்க அவன் தயாராயில்லை. தர்க்கத்திற்கு அப்பாற்பட்டவள் அவள் கவிஞன் மனத்தில் அப்போது உரைத்ததெல்லாம் 'இப்படிப் பச்சையாய் எழுதியதைத் தவிர ஒரு பரிசுத்தத்தையும் தொட்டதே இல்லையே!' என்பதுதான்.

"உண்மைதான், அம்மா. இத்தனை நாளும் சதையைப் பற்றியே கவியெழுதி, அதுவே சதமென்று கிடந்துவிட்டேன். கடவுளுக்கே அது பொறுக்காமல் இப்படிக் கட்டழகு வடிவங் காட்டி என் கண்ணைத் திறந்துவிட்டான். புதருக்குள்ளே உட்கார்ந்துகொண்டு பூவின் வாசத்தை நுகர மறுத்த எனக்குப் பூவும் கையுமாக வந்து புத்தி புகட்டிவிட்டாய். என் மயக்கம் தெளிந்துவிட்டது, தாயே. நான் என்னை அறிந்து கொண்டேன்," என்று கூறித் தனக்கு முன்னால் கிடந்த தாள்களையெல்லாம் ஒன்றாய்த் திரட்டி, அந்தப் பெண் மலங்க மலங்க விழித்துக் கொண்டிருக்கும் போதே சுக்கல் சுக்கலாகக் கிழித்துப் போட்டுவிட்டு எழுந்தான் கவிஞன்.

ஏதோ அற்புதம், தரிசனம் என்றெல்லாம் சொல்வார்களே, அந்தப் பாவனையில்தான் நம் கவிஞன் அந்த நிகழ்ச்சியை எடுத்துக் கொண்டான் போல் இருக்கிறது

அதன் பிறகு அவன் சதைப் பிடிப்பான காதலைப் பற்றி ஒரு வரிகூட எழுதவில்லை பத்திரிகை விளம்பரப்படி ஒரு காவியம் எழுதவே செய்தான். ஆனால், அது ஆன்மாவென்றும் சொர்க்கமென்றும் ஒரே பிதற்றலாக இருப்பதை அறிந்து அதை வெளியிட்ட பத்திரிகையாளர் இரண்டே இதழ்களோடு நிறுத்திவிட்டார். பிழைக்கத் தேரிந்தவர். எத்தனையோ பேர் மீண்டும்

www.padippakam.com



காதலைப் பற்றி எழுதும்படி கெஞ்சாத கெஞ்சு கெஞ்சினார்களாம். நம் கவிஞன் 'மாட்டவே மாட்டேன்' என்று ஒரேயடியாய் மறுத்துவிட்டானாம்.

நாளா வட்டத்தில் அவன் பெயர் மறைந்தே போய் விட்டது. எப்பொழுதாவது தனி வழிப் போகும் பெண்ணின் பின்னால் இரண்டோர் இள வட்டங்கள் கவிஞனுடைய பழைய காலத்துப் பாட்டைச் சீட்டியடித்துக்கொண்டு போவதோடு சரி. அதுவும் அவனுடைய வாழ்நாளிலேயே அருகி விட்டது.

அவ்வளவுதான். அதின் பிறகு, அவன் என்னானான் என்கிறீர்களா? ''அவர் சொர்க்கத்தில் இருக்கிறார்,'' என்று சொல்கிறார்கள் அவனுடைய பிற்கால இலக்கிய பக்தர்கள். நம்பலாம். ஏனெனில் நம்மில் யாருக்கும் நரகத்திற்குப் போகும் ஆசை இல்லை பாருங்கள்.

/முத்து நிலவு/

## சுமைகள்

பந்தபாரங்கள் எறியப்பட்டன.
தேகபாரம் எறியவே
துவங்கியது யாத்திரை.
அப்படியாயின்,
முதுகில் ஏன் இந்தச் சுமைகள்?
பார்வையில் புகைக் கருமை?
குனிந்த தலை நிமிர்கிறது.
தோள் சுமை இறங்குகிறது.
உன் முகத்தில்—
யாத்திரீகனே,
எத்தனை சூரியன்கள்!

## அல்ல

எறும்பு மாதிரி
சேர்த்தவற்றை,
பருந்து மாதிரி
அடித்துப் போனான்.
இவன் மருமகனா?
சம்பல் நதி மான்சிங்.
மனிதப் புதையலைத் தந்தும்,
உலோகப் புதையலைக் கேட்டு
தலை சொறிந்து நின்றவன்.
நந்தவனத்தைத் தந்தவனுக்கு
முட்புதரையும்,
சாமரம் தந்தவனுக்கு
சாட்டையையும்,
கொடுத்தவன் இவனன்றோ!
மருமகன் அல்ல இவன்,
மான்சிங்!

/என்.ஆர்.தாசன்/

படிப்பகம்

www.padippakam.com

# இலக்கியமும் வாழ்க்கையும்

**வா**ழ்வின் உன்னதக் கூறுபாடுகள் இலக்கியமாக்கப்படும் போது, இலக்கியமும் வாழ்வின் சாயல் கொண்டதாக அமைகிறது. ஒரு படைப்பாளியின் இலக்கியம் பூரணத்துவம் பெற்று உன்னதம் எய்தும் போது, மேலும் மேலும் புதிய மெருகோடு படைத்தளிக்க வேண்டும் என்னும் அவனது லட்சிய வேட்கை அறிவுலகில் அவனது நிலையை உயர்த்தும்.

இலக்கியவாதியின் அறிவுலகச் சாதனையே அவனது வாழ்வின் வெற்றியாக ஏற்றுக் கொள்ளப்படும். சிலரது வாழ்க்கை அனுபவங்கள் இலக்கியத்தைக் காட்டிலும் சுவாரஸ்யம் மிக்கதாய் அமைந்து விடுவதுண்டு. இத்தகைய வாழ்க்கை நாம் படிக்கக் கிடைக்கும் சிறந்த புத்தகம். வாழ்க்கையை உயர்த்துவதும் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்ததும்தானே இலக்கியம்! வாழ்க்கையைப் பற்றிப் பேசுவதும் இந்த வாழ்க்கை பிறப்பித்ததும்தானே இலக்கியம்!

வாழ்வாங்கு வாழ்ந்து சாதித்த ஒரு மாமனிதனுக்கு மரணம்கூட மரியாதை தருகிறது. 'இன்னும் சில காலம் இருக்க மாட்டானா?' என்று ஏங்கி யழச்செய்யும் அவன் மரணம் எவ்வளவு பேரை சோகம் கொள்ளச் செய்கிறது!

இவ் வாழ்க்கையின் வெற்றி தோல்விகள், இன்ப துன்பங்கள், ஜனன மரணங்கள், மேடு பள்ளங்கள் ஆகியவையே இதன் மயங்கச் செய்யும் மாயக் கானல் நீரலைகள். நிலையற்ற இந்த வாழ்க்கையில் நிலையான சில அம்சங்களும் உண்டு என்பதை உணர்ந்து, வாழ்ந்து, அறிவு பூர்வமாக அதை ஏற்று வெற்றி கொள்பவனே சிறந்த மனிதன்.

வாழ்க்கையை வெகுவாக ரசிக்கிறவனும், அதில் மயங்கி ஆழ்ந்து போகிறவனும், அதனைப் பற்றி அறிந்து உணர்த்துபவனுமே சிறந்த இலக்கியவாதி. மற்றவர்களைக் காட்டிலும் ஒரு இலக்கியவாதிக்கு வாழ்க்கையின்பால் அதிக ரசனையும் பற்றும் இருக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



வாழ்க்கையின் சகல அம்சங்களையும் உணர்வு பூர்வமாக அனுபவித்து, அறிவு பூர்வமாக் உணர்த்துபவனே சிறந்த இலக்கியவாதி. அவன் உணர்ச்சிகளால் ஆட்கொள்ளப்படுபவன். சமுதாயக் கோட்பாடுகள் தன்னை அடிமைப்படுத்த விடமாட்டான். அவன் சுதந்திரப் பறவையாகச் சிறகடிப்பவன்; விடுதலை விரும்பியாக வேட்கை கொள்பவன்.

வாழ்க்கை அவனுக்கு மது போல் போதை தர வல்லது. வாழ்க்கையின் கீழ்மையை வென்று மேன்மையடைபவன் அவன். வாழ்தலை ஒரு வேள்வி போல் நடத்துபவன். வாழ்க்கையை இலக்கியமாக்கும் அவனது சாதனை அவனையே ஒரு மாபெரும் மனுதனாக்கிக் காட்டுகிறது. அவனது வெற்றிகரமான வாழ்க்கையை எண்ணிப் பலர் வியக்கின்றனர். அவனது ஓங்கு புகழ் அவனை ஒரு தேவ மானுடனாக்குகிறது. அவன் பார்த்து அனுபவித்த் வாழ்க்கை கதையாகிறது; பழகி ரசித்த மனிதர்கள் கதையின் பாத்திரங்களாகிறார்கள்.

ஆக, அவன் வாழ்க்கையைப் பயில்கிறான்; மனிதர்களைப் படிக்கிறான். இக் கல்விதான் இறையனுபவம். இக் கலைதான் மாயக் கலை. இவ் வுலகமும் வாழ்க்கையும் விவரங்களில் அடங்காத அதிசயங்கள். காலத் திரையில் இறைவன் தீட்டும் மயக்குச் சித்திரங்கள். மொழியை மீறிய மோகன இலக்கியங்கள் அவை; மோனத்தில் துயிலும் ஆனந்த ஸ்வரங்கள்.

ஆன்மிகம் உணரும் மனத்தை அழகு படுத்துகிறது. லௌகிகம் யதார்த்த வாழ்க்கையை மேம்படுத்துகிறது. நேர்மையை நிலைப்படுத்திக் கீழ்மையைக் களைந்தெடுப்பதே காலங்காலமாக நிகழ் கொண்டிருக்கும் வாழ்வியல் மெய்ப்பாடுகள். இவற்றின் ரசப் பூச்சில் பிரதிபலித்து, வண்ணம் பிரித்து மகிழும் வானவில்களே இலக்கியங்கள்.

/ச. உமாபதி/

படிப்பகம்

www.padippakam.com

# ஆலோலம் பாடி

''யே! வெங்கண்ணா, இன்னக்கி என்ன... ஏங்கரிசக் காட்டுப் பரண்ல ஆலோலம் பார்ட்ப் போலியா? சொல்லி ரெண்டு நாளாவுதுல்ல? வெளஞ்ச பருத்தியையெல்லாம் இன்னும் ரெண்டு நாள்லே சால் போட்டு பறிக்கிறதுக்கு ஆள் விடணும். ஒரு பக்கம் உளுந்து செடியில் பயிறு நல்லாப் பிடிச்சி முத்திப் போய்த் தொங்குது. இந்தச் சமயத்துல நீ அங்க இல்லைன்னா இராவுலயுஞ்சரி, பகல்லயுஞ்சரி பறவைபட்சிக வந்து கொத்தி தின்னு அழிச்சிப் போட்டுப் போய்றாதா? பறவைபட்சிகள விடு... இந்த ரெண்டுகால் மனுச ஜென்மங்க கிட்டயிருந்து வர்ற இடைஞ்சலு, நபம பிழைப்பையே கெடுத்துரும். சீக்கிரம் கவண் கல் எடுத்துட்டுப் புஞ்சைக்குப் போ. நேரா நேரத்துக்கு கஞ்சியோ, கூழோ அனுப்பிச்சிர்றேன்... ஒரு மூணு நாளக்கித் தான். அப்புறம் விளஞ்ச பருத்தியையெல்லாம் பறிக்க ஆரம்பிசசுரலாம்,'' என, அதிகாலையில் கொள்ளைக்குப் போக நடந்து கொண்டிருந்த வெங்கண்ணாவிடம் சொல்லி முடித்தார் அந்த ஊரின் பெரிய சம்சாரி மொட்டையா நாயக்கர்.

''சரிங்கய்யா, இன்னக்கிச் சாயங்காலமா வடக்குப்பட்டியிலிருந்து வர்ற மாட்டுவண்டியில ஏறிப் புஞ்சைக்கு போயிர்றேன். ரெண்டு நாளா மேலுக்கு சேட்டமில்லாம இருந்ததுனால, எங்கையும் நகரமுடியல. ஒங்க புஞ்சைக்கு ஆலோலம் பாடிட்டு, அதுக்கப் புறமா சர்க்கரை நாயக்கர் புஞ்சைக்கு ரெண்டு மூணு நாள்ல போவணும்,'' எனச் சொல்லிவிட்டு பவ்யமாக நகர்ந்தான் வெங்கண்ணா.

ஆலோலம் பாடி கவண் விடுவதில் வெங்கண்ணாவுக்கு நிகர் அவனே தான். அதனால் தான், அந்த ஊரிலுள்ள நிலக்கிழார்கள், பெரிய, சிறிய சம்சாரிகள் அவனையே ஆலோலம் பாட அழைப்பர். அவனும், அவர்கள் கொடுக்கும் எதையும் மறுப்பில்லாமல் வாங்கிச்செல்வான்.

வெங்கண்ணா பரண் மேல் ஏறி, சுற்றிலும் புஞ்சையை ஒரு நோட்டம் விட்டானானால், அந்த நோட்டத்திலிருந்து ஒரு பறவை பட்சியோ, இல்லை நரியோ கூட தப்ப முடியாது.

அந்த ஊரிலிருந்து அரை மைல் தொலைவில் வடக்குப் பட்டி என்ற, இருபது முப்பது குடித்தனங்கள் கொண்ட குக்கிராமம் இருக்கிறது. அதைச் சுற்றி உள்ள ஏகப்பட்ட கரிசல் புஞ்சைகள் எல்லாம் இந்த ஊரிலுள்ளவர்களைச் சார்ந்ததே. அந்த குடித்தனக்காரர்கள் எல்லாம், இந்த சம்சாரிகளை நம்பிப் பிழைப்பவர்கள். அவர்களில் ஒருவன்தான் உழவு போடும் கன்னையா

படிப்பகம்

www.padippakam.com



அன்று சாயங்காலம் வடக்குப்பட்டியிலிருந்து மாட்டு வண்டியை ஓட்டிக்கொண்டு உழவு போடும் கன்னையா வந்திருந்தான்.

அவன் வண்டி நிறைய கொண்டு வந்திருந்த பருத்தி மிலாரை மொட்டையா நாயக்கரின் படப்பில் இறக்கி வைத்துவிட்டு, மறுபடியும் மாடுகளை வண்டியில் பூட்டிக் கொண்டு வடக்குப்பட்டிக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான். இருட்டிக் கொண்டுவரும் அந்த நேரத்தில் வெங்கண்ணாவும் அந்த வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

''எலேய்... வெங்கண்ணாவா?... வண்டியிலே இந்நேரம் எதுக்கிலே ஏறி உட்கார்ற? எங்கையும் ஆலோலம் பாடப்போறியா?,'' என கேட்க, ''ஆமா கன்னையா... இன்னேலேர்ந்து ஐயாவோட புஞ்சையிலேர்ந்து ஆரம்பிக்கிறேன்... ஒவ்வொன்னா முடிக்க ஆரம்பிக்கணும். இந்த வருச விவசாயத்துலே பருத்தி எல்லா புஞ்சையிலும் சக்க போடு போட்டிருக்கு. மொட்டையா நாயக்கருக்கும், சர்க்கரை நாயக்கருக்கும் என்னைய கூப்பிடறதுல மனஸ்தாபம் போல... நா என்ன பண்ண முடியும்? மொதல்லயே மொட்டையா நாயக்கர் ஏங்கிட்ட சொல்லி வச்சிட்டாரு, 'எலேய் வெங்கண்ணா, நீ தாம்லே நம்ம புஞ்சைக்கு மொத மொதலா ஆலோலம் பாடணும். மீறி காரியத்தை எதையும் கெடுத்துப்புடாத'ன்னு.''

''சரி சரி, நல்ல நேரத்துக்கு வந்து சேர்ந்த... இருட்டிப் போச்சில்ல. துணைக்குத்துணையாப் பட்டிக்குப் போய்ச் சேர்ந்துறலாம்,'' என சொன்னவன் என்ன நினைத்தானோ, தொடர்ந்து ''ஆமா! வெங்கண்ணா, இன்னக்கி அமாவாசையில்ல? எங்க பார்த்தாலும் கிய்யினு இருட்டால்ல இருக்கும். இன்னக்கின்னு பார்த்து பருத்தியைப் பறிச்சிட்டு போறதுக்கு திருட்டுப் பயசெல்லாம் வருவானுங்களே. அது போக, இராவுல என்னவெல்லாம் வருமோ தெரியலையே,'' என்று சொல்லி வைத்தான். அதற்குள் பட்டி வந்துவிட்டது.

வண்டிக்காரன் கன்னையாவிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு தான் ஆலோலம் பாடப்போகும் புஞ்சைக்குச் சென்றான் வெங்கண்ணா தனியாளாக. ஆனால், இன்றைக்கு என்னமோ, என்றைக்குமில்லாத அளவுக்கு மனசில் கொஞ்சம் பயம் ஏறியிருந்தது. ஒருவேளை கன்னையா சொன்னதனாலோ!

படிப்பகம்

www.padippakam.com

நடுச்சாமத்தில் பரண் மேல் ஏறி ஆலோலம் பாடிக் கொண்டே குதியாட்டம் போட்டவனுக்கு, திடீரென தெற்கு மூலையிலிருந்து யாரோ ஒரு மனுசப்பயல் புசுபுசுவென நுழையும் சத்தம் கேட்டது. அந்தத் திசையை நோக்கி பார்வையை வெறிக்க விட்டவன், டார்ச் லைட்டை அடித்து மேலே தூக்கிப்பார்த்தான். ஒரு மனித உருவம் பருத்தியைப் பிரித்து மூட்டை கட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது. அது இன்னார் என சரியாகத் தெரியவில்லை. முகத்தை மறைத்து முகமூடி மாதிரி துணி போட்டிருந்தான். ஆனால், அவன் பருத்தியைப் பிரித்துக் கொண்டிருப்பது மொட்டையா நாயக்கர் புஞ்சையில் அல்ல. சோளக் கொல்லை வரப்பைத்தாண்டி சர்க்கரை நாயக்கர் புஞ்சையில்.

உடனே, வெங்கண்ணா சத்தங்கொடுக்க ஆரம்பித்தான். ''யேய்! யார்ரா அது? இங்க என்னடா உனக்கு சோலி? போப்போறியா! இல்லைக் கல்லைக்கட்டிக் கவண்ல விடவா?'' என சொல்லிக்கொண்டே அந்தப் பயலை நோக்கி நடந்தான்.

வெங்கண்ணா வருவதைப் பார்த்து விட்ட மனித உருவம் ''டேய் ஆலோலம்பாடி, ஏங் கிட்டக்க வராத. தயவு செஞ்சி என் விஷயத்துல குறுக்கிடாத. நான் இன்னக்கி நேத்து இந்தத் திருட்டு பண்ணல. நான் பறிக்கிறதுல உனக்கு சேர வேண்டிய பங்கை கொடுத்துர்றேன். அருவமில்லாம போயிரு. மீறி ஏதாவது பேசின... குரவளைய நெரிச்சிப் போட்டுருவேன்,'' என, குரலில் வித்தியாசங் காட்டிப் பேசினான்.

''யேய்! என்னையா மிரட்டுற?... நான் எத்தனை வருசமா இந்தப் புஞ்சைகளை காவக் காத்துக்கிட்டு இருக்கேன்னு தெரியுமா? இந்தப் புஞ்சையை சேர்ந்தவங்ளுக்கு எப்பவுமே நான் விசுவாசமா இருக்கக் கூடிய ஆளு. அவங்களுக்கு ஒருநாளும் துரோகம் நெனக்கமாட்டேன். நான் கவண் அடிக்கிறதுக்குள்ள இந்த இடத்தை விட்டுப் போயிரு,'' என்றான் ஆக்ரோசத்துடன் வெங்கண்ணா.

''ஒன்னக் கொல்லச் சொல்லி அனுப்பினதே மொட்டையா நாயக்கர்தான். சர்க்கரை நாயக்கர் புஞ்சையிலே உன்னைய பொலி போட்டாத்தான் போலீஸ்காரனுங்க கொலைக்கேசை அவர் மேல எழுதுவாங்க. அது போக இராவுல பேய், பிசாசு வரும்னு இனிமே இந்தப் பக்கம் எவனுமே வரமாட்டான். இவ்வளவு யோசனையவுஞ் சொல்லி, ஒன்னக் கொலை பண்ணச் சொன்னவருக்கு விசுவாசமா இருக்கப் போறியாக்கும்,'' என சொல்லிக் கொண்டே வேகமாக அருகில் வந்து, வீச்சரிவாளை வைத்து மார்பில் வெட்டிவிட்டு, பருத்தி மூட்டையோடு ஓட ஆரம்பித்தது அந்த மனித உருவம்,

படிப்பகம்

www.padippakam.com



வெட்டுப்பட்ட மார்புப் பகுதியிலிருந்து ரத்தம் பீறிட்டு எழ, அந்த வலியின் வேதனையோடும், அந்தத் திருட்டுப் பயலைத் துரத்தினான் வெங்கண்ணா.

ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கு முன்பே, யோசனையோடு மாட்டு வண்டியை நிறுத்தியிருந்த அவன் அந்த இடத்தை அடைந்தவுடன். மாடுகளை கழட்டி வண்டியோடு பூட்ட ஆரம்பித்தான். வெங்கண்ணா ஒரு மறைவான இடத்தில் நின்றுகொண்டு, கல்லை கவணில் வைத்துக் குறிபார்த்து அடிக்க, அது வண்டி ஓட்ட ஆயத்தமாய் உட்கார்ந்திருந்த மனிதனின் நெற்றியைப் பலமாகத் தாக்கியது.

''அய்யோ... அம்மா'' என அலறிக்கொண்டே வண்டியிலிருந்து கீழே விழுந்தவன், சிறிது நேரத்தில் பேச்சிழந்தான்.

அவன் அருகே வந்த வெங்கண்ணா, அவன் போட்டிருந்த முகமூடித் துணியைப் பிய்த்தெரிந்து விட்டு, முகத்தை உற்றுப்பார்த்ததும் ஒரு கணம் அதிர்ச்சியடைந்தான். அவன் உடலைத் தூக்கி மாட்டு வண்டியில் கிடத்தி, மொட்டையா நாயக்கர் வீட்டிற்கு வண்டியை ஓட்டத் தொடங்கினான்.

''ஒன்ன கொல்ல சொல்லி அனுப்பினதே மொட்டையா நாயக்கர் தான்,'' என்று சொல்லி இப்போது அடிபட்டுக்கிடக்கும் வண்டி ஓட்டி கன்னையா மீது அவனுக்கு அனுதாபம் சுரந்தது

**/பொன்னீஸ்வரன்/**

---

## முரண்பாடுகள்

பணக்காரர்கள் பட்டாசு
கொளுத்தி மகிழ்கிறார்கள்.
ஆனால், பட்டாசுகளோ
ஏழைச் சிறுவர்களைக்
கொளுத்தி மகிழ்கின்றன.

—குடந்தை பரிபூரணன்

○

## உத்தமபுத்திரர்கள்

நீலக்கடலோரம் வீசும்
நேசமிக்க பூங்காற்றே
நீலவானில் நீந்தும்
நிலவுக் கீற்றே,
நீங்கள்தான் இக் கலியுகத்தில்
கையூட்டுப் பெறாது
கடமையைச் செய்யும்
உத்தம புத்திரர்கள்!

—ரா.தேவராசன்

○

## ஒதுக்கம்

எதிர்காலம்
வாடாது இருக்கத்தான்
உண்மைகள் மனிதனை விட்டு
ஒதுங்கி விட்டனவோ!

—இரா.நவமணி

படிப்பகம்

www.padippakam.com

## சிந்தக சித்திரங்கள்

### காலம்

கதவைத் தட்டியது
கடமை.
'பிறகு வா' என்றேன்
சோம்பலோடு,
காலம் தாழ்த்தி வந்தது
கடமை. நான் திகைத்தேன்;
கூடவே நான்கு கடமைகள்
சேர்ந்து வந்திருந்தன.

—குடந்தை பரிபூரணன்

### அவநம்பிக்கை

மனிதனின் மங்கிய
செயல்கள்,
நியாயமற்ற வழிகள்,
நேர்மையற்ற முறைகள்.
அதன் விளைவாய்
உலகம்
மனிதனை நம்ப மறுத்துத்தான்
வறட்சிகளைப் பிரசவம்
செய்கிறதோ!

—இரா.நவமணி

### நெஞ்சங்கள்

நாளைய வாழ்வை
கண்களின் மூலம்
ஒத்திகை பார்க்க
கனவுகளைக் குத்தகைக்கு
எடுக்கும் நெஞ்சங்கள்.

—தா.ப.ஔதிகன்

### அது ...

செம்பருத்தி பூத்துவிடும்
செத்துப்போன காக்காவிற்காய்
வட்டமடிக்கும்
நூறு காக்காய்...

தேர்தல் முடிவிற்காய்
மகிழ்ந்து போகும் ஒன்று;
எரிந்துபோகும் இன்னொன்று.

கவிழ்ந்த
மழைநீர்க் கப்பல்:
பெரியவர்க்குப் பொருட்டல்ல;
குழந்தைகளுக்கோ
நஷ்டம் கோடி.

கூடத்தில் நடக்கும்
நமஸ்கார நாடகம்
ஒத்திகையின்றியே
அரங்கேறும் அடிக்கடி;
மரத்துப்போன அக்காவிற்கு
நடிப்புமட்டும் மறக்காது.

கோடிவீட்டு இருமல்
ஒருநாளும் நிற்காது,
இருட்டையும் எங்கள்
உயிரையும் கிழித்துக்கொண்டு.

சாராயக் கடையில்
சப்தம் கேட்கும்போது
அக்கரகாரத்துக் கதவுகள்
அச்சத்தோடு அடைக்கப்படும்.

மனசு வேலி தாண்டிப்
போகும்போது
கீதையின் பக்கங்கள்
மூடப்படும் மரியாதையாய்

/நா. விச்வநாதன்/

www.padippakam.com



# நாடு நலிகிறது

சாதி என்ற பெயரால் நித்தம்
சண்டை வளர்கிறது—அதனை
மோதி மிதிக்கும் சட்ட மெல்லாம்
முத்தம் கொடுக்கிறது.

கோவண மில்லா குழந்தை இங்கே
கோடி கிடக்கிறது—கட்சிக்
கொடிகள் மட்டும் விதவிதமாக
காற்றில் பறக்கிறது.

கோட்டைக் குள்ளே குள்ள நரிகள்
கூக்குர லிடுகிறது—வெளியே
ஓட்டுப் போட்ட மக்கள் உள்ளம்
ஓல மிடுகிறது.

மதவெறி மொழிவெறி இரண்டும் சேர்ந்து
மனிதனைக் கெடுக்கிறது—கெட்ட
மடமை வளர்க்கும் மனித னாலே
மானம் கெடுகிறது.

புதுப்புது சட்டம் ஏட்டில் தீட்டி
படிக்கப் படுகிறது—இதனால்
புதுப்புது கட்சி புதுப்புது கொள்கை
பேசப் படுகிறது.

நாட்டில் எங்கும் பிரிவினை வாதம்
நடன மிடுகிறது—மிருகக்
கூட்டம் உழைப்பைச் சுரண்டி நாளும்
கொள்ளை அடிக்கிறது.

/தே. இராமதாசு/

படிப்பகம்

www.padippakam.com

# பார்வை தெரிந்தபோது...

எல்லாமே அதிசயமாக இருக்கிறது. கண்ணாடிக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டு என் முகத்தையே எத்தனை நேரம் பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்பது ஞாபகம் இல்லை. என்னைப் பற்றிய ஞாபகமே இப்போதுதான் எனக்கு உறைக்கிறது. இத்தனை நாளும் நான் ஒரு 'மறதி' யாகவே இருந்திருக்கிறேன்! ''பதினைந்து வயது ஆகிறது. குப்பைக் கீரை மாதிரி மதமதன்னு வளர்ந்திருக்கே தவிர ஒரு துப்பில்லையே,'' என்பாளே அம்மா! உண்மைதான் என்று இப்போதுதான் விளங்குகிறது.

ஆசை தீர என் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்த ஆசை வரக் காரணம் அவரல்லவா?

அவர் என்றுதான் சொல்கிறேனே! ''யார் அவர்?'' என்றால்? இந்தக் கேள்வியே அவரை அன்னியப் படுத்துகிறது. அப்படிக் கேட்காதீர்கள். என் காதுகளை மூடிக் கொள்வேன்.

ஒரு மணி நேரத்திற்கு முன்புதான் அவரைப் பார்த்தேன். பாத்தபோதே, 'இந்தப் பதினைந்து ஆண்டுகளும் நான் வளர்ந்தது அந்த முகத்தைப் பார்க்கதான் என்று மனசில் பளிச்சிட்டது எனக்கே இப்படி யெல்லாம் நினைக்கத் தோன்றுகிறதே! என்னவோ மாயம் நடந்துவிட்டது. ஒன்றும் விளங்கவில்லை. அம்மா சொல்வது போல் நான் வெறும் 'குப்பைக் கீரை' தானா?

ஒரு மணி நேரத்திற்கு முன் பள்ளி விட்டு வந்ததும், பக்கத்து வீட்டுக் குழந்தை பட்டுவைக் கூட்டிக்கொண்டு, அம்மாவிடம் சொல்லிக்கொண்டு, என் தோழி மஞ்சுவைப் பார்க்கக் கிளம்பினேன். பனகல் பார்க்கைத் தாண்டி, உஸ்மான் ரோட் வந்ததும் தெற்கு நோக்கித் திரும்பிய போது, எங்களுக்கு முன்னால் இரண்டு இளைஞர்கள் போய்க் கொண்டிருந்தனர். அதில் ஒருவர் நடந்து போகும் விதம் என்னை நிதானிக்க வைத்தது. பூஜை அறையில் அம்மா வைத்திருக்கிற வீணையை அம்பாளே திருட்டுத்தனமாய் மடியில் எடுத்து வைத்துக் கொண்டது போல் சிலிர்த்தது.

அப்போது, அவர் பேசும் குரல் கேட்டது. வீணைத் தந்தியின் நாதத்தோடு அம்பாளின் கள்ளச் சிரிப்பும் கலந்து ஒலிப்பதுபோல் குறுகுறுத்தது.

''சொல்வதைக் கேளுங்கள். நாளை இதே நேரத்திற்கு நான் இங்கே வரவேண்டியுள்ளது அப்போது கட்டாயம் வாங்கி வருகிறேன்,'' என்று தன்னுடன் நடப்பவரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஒரு நிமிஷத் தயக்கற்குப் பின் பட்டுவும் நானும் அவர்களைக் கடந்தோம். என் முதுகு குறுகுறுத்தது.

அதே நேரத்தில், கூட

www.padippakam.com



நடந்தவர் கேட்டார்: "முகத்தில் பருக்கள் வந்தால் என்ன சார் செய்யலாம்?"

என் காதுகள் குப்பென்று அடைத்துக் கொண்டன. நெஞ்சு தொண்டைக் குழியில் வந்து நின்றது.

ஆவேசமாகத் திரும்பினேன். என் பார்வையை அவர் தாங்கிக் கொண்டார். அந்த இங்கிதத்தில் வீணை ஒரு காதிலும் அம்பாள் ஒரு காதிலுமாக என்னிடம் இரகசியம் பேசினர்.

நான் திரும்பி நடந்தேன்.

"இக் குழந்தையிடமா மலினமாக நடக்கத்தோன்றியது!"

இது அவர் குரல்.

"சாரி, சார்."

"அந்தப் பால் வடியும் முகத்தில்தான் என்ன அழகு! அந்தப் பார்வையில் என்ன கூர்மை! என்ன நேர்மை! பருக்களே அந்த முகத்தை மேலும் அழகு படுத்தவில்லையா? இந்த அழகு முகத்தை என்னால் மறக்கவே முடியாது!"

எனக்குக் கண்கள் கலங்கிக் கொண்டு வந்தன. ஏன் என்று தெரியவில்லை அவரைத் திரும்பப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. முடியவில்லை தயக்கத்தோடு ஒரு கணம் நின்றுவிட்டு அருகில் இருந்த ஒரு கடையில் நுழைந்துவிட்டேன்.

சற்றுநேரம் வேடிக்கை பார்த்து விட்டுக் கடைசியில் ஒரு ரிப்பன் வாங்கிக்கொண்டு தவிப்போடு வெளியே வந்தேன். அவர் தம் நண்பருடன் சற்றுத் தொலைவில் முன்னிலும் மெதுவாய் போய்க் கொண்டிருந்தார். அவர் எனக்காக நின்று பார்த்துவிட்டு, கடையைவிட்டு நான் வெளியே வராமையால் சோர்வுடன் நடப்பதைப் போலப் பட்டது.

எனக்குத் தோழி வீட்டுக்குப் போக மனசில்லை. எனக்கு நானே கசந்தேன். சற்று நேரம் அங்கேயே நின்றேன். ஆகா! நான் எதிர்பார்த்தது வீண் போவில்லை அவர் திரும்பிப்பார்த்தார். என்னைப் பார்த்ததும் அவர் முகம் எப்படி மலர்ந்தது!

பட்டுவை அழைத்துக் கொண்டு ஒரே நடையாக வீடு வந்துவிட்டேன்.

வீட்டுக்கு வந்துவிட்டேனே தவிர என், எண்ணமெல்லாம் அவரைச் சுற்றியே வட்டமிடுகிறது. இது ஏன்? இந்த என் பருக்கள் அவர் கண்களுக்குத் தெரியவில்லை. என் பால் வடியும் முகத்தில் அவருக்கு எத்தனை ஆசை? என் முகத்தை அவர் மறக்கமாட்டாராம். நான் மட்டும் அவரை மறந்து விடுவேன் என்று நினைத்து

படிப்பகம்

www.padippakam.com

விட்டாரா? நாளைக்கும் அவர் வருவார். நான் அவரைப் பார்க்க வேண்டும்.

இதென்ன அதிசயம்! அவர் முகம் நினைவில் சரியாகப் பதியவில்லையே! நாளை அவரைப் பார்த்தால் கூட அடையாளம் கண்டு கொள்ள மாட்டேனோ! ஐயோ! இதென்ன! என்னை மறக்க முடியாதவரை நான் அதற்குள் மறந்து விட்டேனா! யாரைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறேனோ, அவருடைய முகம் எனக்குத் தெரியவில்லையே!

இல்லை. நான் அடையாளம் கண்டுகொள்வேன் சூரியனை எத்தனை தடவை பார்த்திருக்கிறேன்? பார்க்க முயன்ற போதெல்லாம் கண்கள் கூசத் தலை குனிந்து கொண்டேனே. அதற்காக சூரியனை அடையாளம் தெரிந்து கொள்ளாமலா இருக்கிறேன்!

இல்லை, அவரை நான் கண்டுகொள்வேன்.

''அம்புலு!''

அம்மா அழைத்தாள்.

''என்னம்மா?''

பூஜை அறையில் விளக்கேற்றி வை.''

மீண்டும் ஒருமுறை அவர் மறக்க விரும்பாத என் முகத்தைப் பார்த்துக் கொண்ட பின், கண்ணாடியைவிட்டு எழுந்தேன். குத்துவிளக்கை ஏற்றிக் கொண்டுபோய் பூஜை அறையில் வைத்தேன். வீணை முடியிருந்தது. அம்பாள் மௌனத்தில் விழுத்திருந்தாள். அம்மா பூஜை செய்ய அமர்ந்தாள்.

கண நேரத் தயக்கத்திற்குப் பின் நானும் அவள் அருகிலேயே அமர்ந்து கொண்டேன்.

இதுவரை நான் பூஜை செய்ததில்லை. ஆனால் இன்று பூஜை செய்ய வேண்டும் போல் இருந்தது. கையைக் கூப்பிக் கண்களை மூடினேன்.

''அம்மா, எப்போதும் உன் பார்வை என்னைத் தொடர வேண்டும்.''

என் வேண்டுதல் எனக்கே சிலிர்ப்பாய் இருந்தது.

வெகு நேரத்திற்குப் பின் கண்ணைத் திறந்து பார்த்த அம்மா என்னைக் கூப்பிய கைகளுடன் அருகில் பார்த்ததும் அப்படியே உருகிப் போனாள்.

''அடி கண்ணே, அம்பாள் உனக்கு ஒரு குறையும் வைக்க மாட்டாள். குங்குமப்பொட்டோடு எல்லா ஐஸ்வர்யங்களும் உனக்குத் தருவாடி,'' என உச்சி முகர்ந்தாள். அவள் வாஞ்சையும் வார்த்தைகளும் எனக்கு அப்போது தேவையாயிருந்தன.

மறுநாள் மாலை மஞ்சுவை பார்க்கப் போவதாக அம்மாவிடம் அனுமதி கேட்டேன்.

''நேற்றுப் போனாயே?''

''நேற்று அவளைப் பார்க்கலே. அவளோட சித்தி வீட்டுக்குப் போயிட்டாளாம்.''

''சரிசரி. போயிட்டு சீக்கிரமா திரும்பிடு.''

இன்று நான் பட்டுடைவ

www.padippakam.com



கூட்டிக் கொள்ளவில்லை. தனியாகவே கிளம்பினேன். எத்தனையோ முறை தனியாகப் போயிருந்தாலும் இன்றுபோல் அது என்னைப் பாதித்ததில்லை. குறுகுறுப்போடு விரைந்து நடந்தேன். உஸ்மான் ரோட் வந்ததும் நடை தளர்ந்தது. உடலும் மனமும் படபடத்தது. சாலை நீளவும் என் கண்கள் சலித்தன. ஆகா! அதோ அவர் வருகிறார். என் முகமே பெரிய விளக்காகி அந்தச் சாலையையே பிரகாசிக்க வைப்பதுபோல் தோன்றியது.

நான் நின்றுகொண்டேன். ஏதோ யோசனையாய் தளர நடந்து, என் அருகில் வந்தவரை என் பார்வை பற்றியிருக்க வேண்டும். நிமிர்ந்து பார்த்தவர் அப்படியே ஆயிரம் இதழ் தாமரை மாதிரி பூத்துப் போனார்!

''ஆச்சரியம் கூட நம்மை அதிர வைக்கும்னா அது இதுதாம்மா,'' என்று சொல்லி நடந்தார். நானும் கூடவே நடந்தேன்.

''உன் பெயர் என்னம்மா?''

''அம்புலு.''

''அம்புலுவா?''

''அலர்மேலு.''

''ஓ! அப்படியா? ஆனா, அம்புலுன்னா நீ பக்கமா தெரியறே. அலர்மேலுன்னா தூரமா தெரியுதும்மா, நீ எனக்கும் அம்புலுவாகவே இரு. உன்னை இன்னிக்குப் பார்ப்பேன்னு நினைக்கவே இல்லேம்மா.''

''எனக்கு உங்களைப் பார்க்கத் தோணித்து; வந்தேன்.''

''அம்புலுன்னா நிஜத்தில் ஒரு குழந்தைதான், இல்லையா?''

''என்னைக் குழந்தையாவே பாவிக்கறேளா?''

''ஏன்? அதிலென்ன சந்தேகம்?''

''கேக்கத் தோணித்து. கேட்டேன்.''

அவர் அன்பாய் நகைத்தபடி. ''உனக்குச் சந்தோஷம் தானே?'' என்றார்.

''உங்களுக்குச் சந்தோஷம்னா எனக்கும் சந்தோஷம் தான். நீங்கள் நாளைக்கும் வருவேளா? தினமும் வருவேளா?''

''ஏன் நீ வரச் சொன்னா வர்றேன்.''

''ஆனா, எனக்குத்தான் தினமும் வரமுடியாது. அம்மா அனுமதிக்க மாட்டா. நான் வரமுடிஞ்சபோது உங்களைப் பார்க்கணும்னா நீங்கதான் வர வேண்டியிருக்கும்.''

''சரி. நான் வர்றேன்.''

''உங்களுக்குச் சிரமம்னா வேணாம்.''

''உன்னைப் பார்க்கிறதுக்

படிப்பகம்

குச் சிரமம்னா நான் வாழ றதுக்கே சிரமப் படறதாக அர்த்தமாயிடும்மா.''

அவர் சென்ற பின் தோழி யின் வீட்டுக்குச் சென்றேன். நல்ல வேளை, அவள் வீட்டில் இல்லை. அவள் அம்மாவிடம் சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டேன்.

அன்று இரவு நான் நன் றாகத் தூங்கினேன். இடையில் எழுந்தபோது நடுராத்திரி இருக்கும். அப்பாவும் அம்மா வும் அப்போது கூட விழித் திருந்தார்கள். ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

அன்று காலை எழுந்த போதே அம்மா ஒரு விஷயம் சொன்னாள்

''அம்புஜு, இன்னிக்குக் காலையிலே பத்துமணிக்கு உன்னைப் பார்க்க வர்றாங்கடீ. நேற்று சாயங்காலம்தான் அப் பாவுக்கு தகவல் வந்ததாம். சீக்கிரம் குளிச்சிட்டுத் தயார் பண்ணிக்கோமா.''

இதைக்கேட்டதும், அவர் நேற்று என்னைப் பார்த்ததும் சொன்ன வாக்கியம்தான் என் நினைவுக்கு வந்தது. ''ஆச்சரி யம் கூட நம்மை அதிரவைக் கும்னா அது இதுதாம்மா.''

பத்து மணிக்குப் பெண் பார்க்க வந்தார்கள். பிள்ளை, பிள்ளையின் அம்மா, அப்பா, பிள்ளையின் அக்கா, அவள் கணவர் என்று ஐந்து பேர் வந் தார்கள். எல்லாரையும் நான் நமஸ்காரம் பண்ணிக் கொண் டானதும் சிறிது நேரம் ஏதோ பேசிக் கொண்டார்கள். நான் உள்ளுக்கு வந்து விட்டேன். சிறிது நேரத்தில் பிள்ளையின் தமக்கை அங்கு வந்து என் முகத்தை நிமிர்த்தினாள்.

''இந்தப் பருக்களுக்கு 'க்ளி யரசில்' போட்டுக்கோ. முகத் தை சோப்பு போட்டு அடிக்கடி கழுவிக்கோ''' என்றாள்.

எனக்குக் கசப்பாயிருந்தது. இவர்களுக்கெல்லாம் இந்தப் பருக்கள் மாத்திரமே தெரிவ தேன்? அவருக்கு மட்டும் என் அழகு தெரிந்ததேன்?

சிறிது நேரத்தில் அம்மா ஓடி வந்து என்னைக் கட்டிக் கொண்டு, ''என் ராஜாத்தி, முதல் வரனே குதிர்ந்திடுத்து. நீ எங்களுக்கு ஒரு கஷ்டமும் வைக்கலடி கண்ணே. உன் னாலே எங்களுக்குப் பெருமை தான்டி தங்கமே,'' என்று நெட்டி முறித்தாள். 'குப்பைக் கீரைமாதிரி வளர்ந்துட்டே. ஒரு துப்பில்லே' என்ற அம்மாதான். வீட்டில் எல்லோருக்கும் ஏகப் பட்ட மகிழ்ச்சி. உண்மையில் திருமணம் என்பது மகிழ்ச்சி யான விஷயம்தான்.

நான் மகிழவேண்டும்தான். ஆனால் எனக்கொன்றும் விளங் கவில்லை.

எனக்குத் திருமணம் நிச்சய மாகிவிட்டதைக் கேட்டால் அவர் மகிழ்வாரா? மகிழ்வாரா? இன்று மாலை அவரிடம் சொல்ல வேண்டும். அவர் மகிழ்ந்தால் நானும் மகிழலாம். இப்போதெல்லாம் என்னைப்பற்றி

www.padippakam.com



யாமலேயே அவரைப் பின்பற்றத் தொடக்கியிருக்கிறேன்! இந்த வேளையில் அது ஒன்று தான் எனக்கு வழியாகப் படுகிறது. ஆகவே, அவர் முகத்தை தியானித்துக் கொண்டு அன்று பகல் முழுதும் பேசாமல்' சலனமில்லாமல் இருந்தேன்.

மாலை வந்தது.

''அம்மா, மஞ்சுவைப் பார்த்துவிட்டு வருகிறேன்.''

அம்மா என்னை நிறைவாகப் பார்த்தாள். அவள் கண்கள் பூரித்து விளங்கின.

''போய் வா.''

ஒற்றைச் சொல்லில் அம்மா உத்தரவு கொடுத்து விட்டாள்.

நான் வேகமாக நடந்தேன். உஸ்மான் ரோட் வந்ததுமே அவர் என்க்கெதிரே வருவதைக் கண்டேன். 'மனமே, ஏன் இப்படிப் படபடக்கிறாய்? நான் அவரிடம் சொல்ல வேண்டாமா? அவரை நான் பிரதிபலிக்க வேண்டாமா? பொறு.'

என்னைப் பார்த்த மாத்திரத்தில் அவர் முகம் என்னமாய் வெளிச்சம் காட்டுகிறது!

''வா, அம்புலு. உன்னைப் பார்க்கிறதே ஒரு சுகம் போல மனசு வெளிச்சப் படுகிறதம்மா.''

''உங்களை நான் பின்பற்ற வேண்டும் என்று வந்தேன்.''

''என்ன சொல்கிறாய்?''

''எனக்கு விவரம் தெரிந்து நான் யாரையும் பின்பற்றியதாக நினைவில்லை. ஒருவேளை எனக்குத் தெரியாமல் அப்பா, அம்மாவைப் பின்பற்றி யிருப்பேன். இன்று மனமறிய உங்களைப் பின்பற்றுவதுதான் சரி என்று படுகிறது. நேற்றிலிருந்தே, அல்லது உங்களைப் பார்த்ததிலிருந்தே நான் அப்படித்தான் நடக்கிறேனோ என்னவோ.''

நன்றாக மூச்சை உள்ளுக்கு வாங்கிக் கொண்டேன்.

''என்ன விஷயம் அம்புலு?''

''இன்னிக்குக் காலையில் என்னைப் பெண் பார்க்க வந்தார்கள்.''

'அப்படியா!''

''அவர்களுக்குப் பிடித்துப் போய்க் கல்யாணமும் நிச்சயமாகி விட்டது.''

''அப்படியா!''

'இந்த அழகை யாருக்குத்தான் பிடிக்காது!' என்ற பாவனையே அவரிடம் இல்லை. சற்று முன் என்னைப் பார்த்ததும் வெளிச்சம் காட்டிய முகம் எங்கே என்று அவரிடம் தேடினேன்.

''எத்தனை சந்தோஷமான

படிப்பகம்

www.padippakam.com

விஷயத்தைச் சொல்லியிருக்கிறாய் நீ''

''நீங்கள் சந்தோஷப்படுகிறீர்களா?''

''ஏன்? ஏன் அப்படிக் கேட்கிறாய்?''

''நானும் சந்தோஷப்படலாம் என்றுதான்.''

''சந்தோஷப்படு, அம்புலு. இது உன் கல்யாணம். உன் வாழ்க்கை. உன் சந்தோஷம்.''

''உங்களுக்கு இதில் ஒன்றுமில்லை யல்லவா?''

''எனக்கும் சந்தோஷம் தான் அம்மா.''

''பிறகு ஏன் உங்கள் முகம் இப்படி இருண்டு விட்டது?''

''அம்புலு.''

''நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள். உங்களுக்குச் சந்தோஷமில்லை.''

அவர் பேசாமல் நின்றார். காற்றில் நடுங்கும் தாமரை இலை தண்ணீர் மாதிரி நின்றார்.

''சொல்லுங்கள். பொய் தானே?''

''அம்புலு.''

''சொல்லுங்கள்.''

''உனக்குத் தெரிகிறதல்லவா?''

பொய்தான். எல்லாமே பொய்தான். என்னைக் குழந்தையாகவே நடத்துவதாகச் சொன்னதெலாம் பொய்தான்.

''நான் போகிறேன்,'' என்று சொல்லித் திரும்பினேன்.

''அம்புலு! அம்புலு! உன் முகத்தை ஒரு தடவை பார்க்கலாமா? என்றைக்கும் நன்றாயிரு கண்ணம்மா.''

எனக்கு எல்லாம் விளங்குகிறது. நான் அவரை... அவர் என்னை... செத்துப் பிறந்த குழந்தைக்குப் பெயர் சூட்டிப் பார்க்கவா! ஐயோ! செத்துத் தான் விட்டதா!

'தெய்வமே, எனக்குப் பார்வை தெரிகிறது. ஆனால், பாதை தெரியவில்லை.'

**/கவிதாசரண்/**

---

## பிரசவம்

சூரியனுக்கு
சுகப்பிரசவம்;
தண்ணீரில் பிரதிபலிப்பு.

—புதுவை இளவேனில்



www.padippakam.com



பிறக்கிறது. இந்த ஆண்டு இன்னும் 60 ஆண்டுகளுக்குப் பிறகு இதே ஆண்டாகப் பிறக்கும், இன்று பிறக்கும் குழந்தை இன்னும் 60 ஆண்டுளில் இல்லறத்தை எல்லா வகையிலும் நல்லறமாக நடத்திக் காட்டி, அடுத்து வரும் இதே ஆண்டில் புதியதோர் அறத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதல்லவா காலத்தைச் சக்கரமாகப் பாவித்தவனின் கணக்கு!

காலம் என்பதுதான் என்ன? நாம் காலம் என்று கணக்கிடுவது ஒரு குறியீடுதான்—பாவனைதான் அல்லவா! 1, 2, ...என்று எண்ணப்படும் எண்கள் கூட வெறும் குறியீடுதான், பாவனைதான். 'இதோ கத்தரிக்காய், இதோ பூசணிக் காய்' என்பது போல, இதோ ஒன்று, இதோ இரண்டு என்று சுட்டிக் காட்ட முடியாது. காலம், அல்லது எண்கள், பாவனைதான் என்றாலும் அது நம் தர்க்கத்தில் அடங்குகிறது என்பதுதான் ஆறுதலான விஷயம். ஒருவேளை இந்த அம்சம்தான் நம்மை மனிதனாக்குகிற விஷயமோ! இது நம் பிடிமானத்திற்கு வந்துவிட்டால் வாழ்க்கையே நம் படிமானத்தில் அடங்கலாம். இந்த விழிப்பில் மனம் இலயிக்காத வரை ஒரே தட்டாமாலை சுற்றல்தான்.

காலத்தைப் போல, எண்களைப் போல நமது வாழ்க்கையும் கூட ஒரு பாவனைதான்; நம் தர்க்கத்தில் அடங்குவதே போன்ற பாவனை. வாழ்க்கைக்கு முடிவில்லை; மூப்பில்லை. முடிவும் மூப்பும் வடிவத்திற்குத்தான், இல்லையா! இப்படி முடிவில்லாத, மூப்பில்லாத வாழ்க்கையைப் புலன்களால் ஆளப்படும் மனிதன் எவ்வாறு பாவிக்கிறான், அல்லது தனதாக்கிக் கொள்கிறான் என்பதே முக்கியம். ஆறு ஓடிக்கொண்டிருக்கும் வரைதான் ஆறு. ஓடுவதை நிறுத்திவிட்டால் வெறும் மணல்மேடு. மனிதனும் ஆடிக் கொண்டிருக்கிற வரைதான் மனிதன். ஆட்டம் அடங்கும்போது, மீண்டும் அவன் புனிதனாகவும் பிறக்கலாம்; இல்லை, பிடி மண்ணாகவும் பிறவி எடுக்கலாம். அடங்கும்போது என்ன பிறவி எடுக்கிறான் என்பதுதான் அவன் வாழ்க்கையின் அர்த்தம் அல்லது அர்த்தமின்மை, அல்லவா! அர்த்தம்— நினைவாய்ப் பருகக் கிடைக்கும் ரசம். அர்த்தமின்மை— சுவடில்லாத பாழ்! காலம் நம்மை ரசமாக்கட்டுமே!

படிப்பகம்

www.padippakam.com

VITHAASARAN, Dec. 1991, Regd:TN/MSN 746
tive Literary Monthly in Tamil R.Dis.6479/90

படைப்பிலக்கிய வெளியீட்டாளர்கள்:

# மூசா இலக்கியம்

## MUSA ILAKKIYAM

31, டி.கே.எஸ். நகர், சென்னை-600019.

சந்தாதாரர் ஆகுங்கள்
சந்தாதாரர் ஆக்குங்கள்

படிப்பகம்